இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 60 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 22 – திங்கள்கிழமை 09 அக்டோபர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 60 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 22 - Monday 09 October 2023 - Dak 10 Pages ₹ 5.00

### ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் – மாநிலம் முழுவதும்

# ரூ.11,239 கோடியில் 788 பணிகள் செயல்படுத்தப்படும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.10.2023) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர் பெ.சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர் கே.கனகராஜ் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் செயல்படுத்தி வரும் மகளிர் நலத் திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு வழங்கினர்.

**சென்னை, அக். 9 -**

**‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.11 ஆயிரத்து 239 கோடி மதிப்பீட்டில் 788 பணிகள் 234 சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உயர்நிலை குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**அத்துடன் அடுத்த நிதியாண்டில் ரூ.5 ஆயிரத்து 91 கோடி மதிப்பில் 203 பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு: -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.10.2023) தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலை குழுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 7.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தினை அறிவித்தார்கள். இது குறித்து முதலமைச்சர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 22.08.2022 அன்று எழுதிய கடிதத்தில் அவர்களது தொகுதிகளில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத 10 முக்கிய கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான அரசாணை 28-09-2022 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்து 1896 பணிகளை அரசுக்கு பரிந்துரை செய்தது.

பரிந்துரைக்கப்பட்ட பணிகள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அனைத்து துறைகளிடமிருந்தும் இது தொடர்பான விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன. அதன்படி, நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் இணைத்து செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், 2023-24ஆம் ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளும் பணிகள், என வகைப்படுத்தப்பட்டு அப்பணிகளுக்கு 8.9.2023 அன்று அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலான பணிகளை தேர்வு செய்யும் குழு ஒப்புதல் அளித்தது.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்ற உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலைக் குழு கூட்டத்தில், இத்திட்டத்தின் கீழ், 2023-24 ஆம் ஆண்டில் 234 சட்டமன்ற தொகுதிகளில் 788 பணிகள் ரூ.11,239 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், 2024-25ம் ஆண்டில் 203 பணிகள் ரூ.5,901 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

### 2024-25ம் ஆண்டில் 203 பணிகள் ரூ.5,901 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆசிய விளையாட்டுப் போட்டியில்

## 107 பதக்கங்களை அள்ளிய இந்திய அணிக்கு பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, அக். 10-**

**ஆசிய விளையாட்டுப் போட்டியில் 107 பதக்கங்களை வென்ற இந்திய அணியை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் பாராட்டு - வாழ்த்துச் செய்தி வருமாறு:-

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட இந்திய அணியினருக்கு எனது பாராட்டுகள்!

107 பதக்கங்களை அள்ளியதன் மூலமாக அபாரமான திறன், உறுதி மற்றும் அர்ப்பணிப்பை நமது விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். தடகள சாம்பியன்கள், கூர்மிகு வில்வித்தையர்கள், சீற்றமிகு கபடி அணியினர், இறகுப் பந்து நட்சத்திரங்கள் என இந்தியாவின் பலதரப்பட்ட திறமையாளர்களும் பெரிதும் இத்தொடரில் மின்னியுள்ளனர்.

குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த நமது வீரர்களுக்குச் சிறப்பு பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். உங்களின் தனிச் சிறப்பான பங்களிப்பால் உலக அரங்கில் நமது மாநிலத்துக்குப் பெருமிதம் பொங்கச் செய்துள்ளீர்கள்.

இத்தகைய சிறப்பான பங்களிப்புடன் நமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். உங்களது முயற்சிகளும் சாதனைகளும் இங்கு இன்னும் பலரை ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்திய அணி, வெகுசிறப்பு!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம்!

### இன்று தொடங்குகிறது

சென்னை, அக். 9–

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இந்த கூட்டத்தொடரில் 2023–24ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் தொடர்பான மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் காவிரி விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சி ஆதரவுடன் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி தமிழ்நாட்டுக்கு நீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வர உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேரவைக் கூடுவதற்கு முன்பாக அலுவல் ஆய்வுக்குழுக் கூடி கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது தொடர்பாக முடிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது. மேலும் இந்தக் கூட்டத் தொடர் 3 நாட்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி காவிரியில் கர்நாடகா அரசு தண்ணீர் திறக்க வலியுறுத்தி

## காவிரி டெல்டா மாவட்டங்களில் அக். 11 முழு அடைப்பு!

### பாராமுகமாகச் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து அனைத்துக் கட்சிகளும் பங்கேற்பு!

*தஞ்சை அக். 9 -*

*நடப்பாண்டு குறுவை சாகுபடிக்காக ஜூன் 12 ல் மேட்டூர் அணைதிறக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் சார்பில் குறுவை தொகுப்பு திட்டம் இந்தாண்டும் செயல்படுத்தப்பட்டதால் வழக்கத்தை விட கூடுதல் பரப்பளவில் குறுவை சாகுபடி நடைபெற்றது. காவிரியில் கர்நாடக அரசு காவிரி நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் படி கொடுக்க வேண்டிய தண்ணீரை கொடுக்காததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை நேரடி விதைப்பு, மற்றும் நடவுப் பயிர்கள் சுமார் 2 லட்சம் ஏக்கர் வரை காய்ந்து கருகிவிட்ட நிலையில் எஞ்சிய குறுவை பயிரைப் பாதுகாத்திடவும், சம்பா சாகுபடி பணிகளைத் துவக்கிடவும் காவிரி நீர் தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகா அரசு வழங்க வலியுறுத்தி காவிரி டெல்டா மாவட்டங்களில் பலகட்டப் போராட்டங்கள் நடைபெற்றது.*

*தற்போது கர்நாடக அணைகளில் 80 சதவீதத்திற்கு மேல் தண்ணீர் உள்ள நிலையில் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கக் கூடாது என கர்நாடகத்தில் இரண்டு முறை பந்த் போராட்டத்தை பி.ஜே.பி. மற்றும் கன்னட அமைப்புகள் நடத்தியுள்ளன.*

*காவிரி டெல்டா மாவட்டங்களில் எஞ்சியுள்ள குறுவைப் பயிரை பாதுகாத்திடவும், சம்பா சாகுபடி துவங்கிடவும் உடன் காவிரியில் மாத வாரியாக வழங்கிட வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு வழங்க வலியுறுத்தி காவிரி டெல்டா மாவட்டங்களில் அக்டோபர் 11 அன்று முழு அடைப்பு மற்றும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடைபெற உள்ளது.*

*எஞ்சிய குறுவைப் பயிரைப் பாதுகாத்திட சம்பா சாகுபடியை தொடங்கிட தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை திறக்க காவிரி ஆணையம் உத்தரவிட வலியுறுத்தியும் தமிழக அரசு பலமுறை ஒன்றிய அரசிடம் வலியுறுத்திய பின்பும் பாராமுகமாக செயல்படும் ஒன்றிய பி.ஜே.பி. அரசைக் கண்டித்தும் நடைபெறும் இந்த முழு அடைப்பு மற்றும் மறியல் போராட்டம் முழு வெற்றியடைய அனைத்து அரசியல் கட்சிகள், வணிகர் சங்கங்கள், அனைத்து விவசாய மற்றும் விவசாய தொழிலாளர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் பேராதரவு தர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன.*

## இஸ்ரேல் நகரங்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்!

### 500க்கும் மேற்பட்டோர் பலி!

ரோம், அக். 9 -

இஸ்ரேல் - ஹமாஸ் இயக்கத்தினர் இடையேயான மோதலில் 500க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், இருதரப்புக்கும் சண்டை மேலும் தீவிரமடைந்துள்ளது.

ஆபரேசன் அல் அக்ஷா என்ற பெயரில் இஸ்ரேல் நகரங்களுக்குள் அதிகாலை நிலம், நீர், வான் வழியாக ஊடுருவி ஹமாஸ் இயக்கத்தினர் தாக்குதலை நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் நகரங்கள் மீது அடுத்தடுத்து சுமார் 5 ஆயிரம் ராக்கெட்டுகளை வீசினர். இந்த திடீர் தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் ராணுவ வீரர்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

மேலும் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் ஏராளமானோரை காசாவுக்கு ஹமாஸ் இயக்கத்தினர் சிறைபிடித்து வந்தனர். இந்த தாக்குதலால் பேரதிர்ச்சியடைந்த இஸ்ரேல், ஹமாஸ் இயக்கத்தினர் கட்டுப்பாட்டிலுள்ள காசாவில் 150 இடங்களை குறிவைத்து போர் விமானங்கள் மூலமும், ட்ரோன்கள் மூலமும் பதில் தாக்குதல் நடத்தியது.

இதில் காசாவில் 230க்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். ஹமாஸ் இயக்கத்தினர் நரகத்தின் வாசலை திறந்து விட்டுள்ளதாக தெரிவித்துள்ள இஸ்ரேல், காசாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினரின் பதுங்குமிடங்களை முழுவதும் அழிக்க போவதாக கூறி, தாக்குதலை தீவிரபடுத்தியுள்ளது. இதையடுத்து இருதரப்புக்கும் அங்கு சண்டை மேலும் தீவிரமடைந்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இயக்கத்தினர் இடையேயான மோதல் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அவசரமாக கூடி ஆலோசனை நடத்தியது. மேலும் இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி இஸ்ரேலுக்கு எதிராக எந்த நாடும் செயல்படக்கூடாதென அமெரிக்க அதிபர் ஜோபைடன் எச்சரித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 09-10-2023

# வள்ளலார் சமஸ்கிருதம் போற்றினாரா?

**திங்களுக்கெனச் சொந்தமாகச் சொல்லிக் கொள்ள தத்துவ மேதைகளும் வழிகாட்டிகளும் தலைவர்களும் இல்லாத காரணத்தால் பெருமைக்குரியவர்கள் அனைவரையும் தங்களவர்களாக கபளீகரம் செய்து கொள்வது பா.ஜ.க.வின் இழிசெயல்களில் ஒன்றாகும். அப்படித்தான் திருவள்ளுவர் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் - அண்ணல் அம்பேத்கர் - மாவீரன் பகத்சிங் ஆகியோரை தங்களது வசதிக்கு ஏற்ப திரித்து தங்களவராகக் காட்டி வருகிறார்கள். இந்த வரிசையில் அருட்திரு வள்ளலாரும் அவர்கள் கையில் சிக்கி விட்டார்.**

மதவாத அரசியல் செய்து கொண்டிருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, 'சாதி - சமய வேறுபாடின்றி சன்மார்க்க நெறியில் வாழ்வதுதான் இகத்தில் பரத்தைப் பெறுவதாகும்' என்று சொன்ன வள்ளலார் வழியைப் பற்றிப் பேசலாமா? சாதி மத வேறுபாடின்றி உலகோர் அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை அடைதல்தான் வள்ளலாரின் நோக்கம் ஆகும். மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசினார். ஒளிவடிவில் வழிபடுவதையே வலியுறுத்தினார். செல்வர் - வறியர் பேதம் கூடாது என்றார். ஆண் - பெண் ஆகிய சமத்துவத்தை உறுதிசெய்தார். கணவன் இறந்தால் தாலியை நீக்குவதையே கண்டித்தார். இப்படி அவரது சீர்திருத்தங்கள் பலப்பல. பெண்ணை 'மனுநூல்' இழிவாகச் சொன்னது. அதனை மறுத்து உரிமைப் பெண்ணாக அடையாளப் படுத்தியவர் வள்ளல் பெருமான்.

சடங்குகளையும் - சாத்திர சம்பிரதாயங்களையும் வெறுத்தார். இவை பொய் என்றும், சழக்கு என்றும் கண்டித்தார்.

* **வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்**

**வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்**

**சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை**

**என்ன பயனோ இவை'** - என்று பாடியவர் அவர்.

★ **இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை**

**இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு;**

**மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம**

**வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு;...** (ஆறாம் திருமுறை 33 : 10) - என்று பாடியவர் அவர்.

★ **"சதுர்மறை ஆகம சாத்திர மெல்லாஞ்**

**சந்தைப் படிப்புநஞ் சொந்தப் படிப்போ'** (ஆறாம் திருமுறை 143 : 4) - என்று பாடியவர் அவர். இதனை பிரதமருக்கு கொடுத்து படிக்கச் சொல்லுங்கள்.

'தமிழ் சமஸ்கிருதம் - ஆங்கிலத்தில் இளைஞர்கள் சரளமாகப் பேச வேண்டும் என்று வள்ளலார் விரும்பினார். அதுதான் எங்களின் தேசியக் கொள்கை' என்றும் சொல்லி இருக்கிறார் பிரதமர். மும்மொழிப் பாடசாலையை வள்ளலார் உருவாக்கினார் என்பதை வைத்து இப்படிப் பேசி இருக்கிறார் பிரதமர். சமஸ்கிருதத்தை வள்ளல் பெருமான் ஏற்றுப் போற்றியதைப் போன்ற தோற்றம் கட்டமைக்கப்படுகிறது.

வைதிக கருத்துகளை மட்டுமல்ல, வைதிக மொழியாம் சமஸ்கிருதத்தையும் கடுமையாக விமர்சித்தவர் வள்ளலார் அவர்கள்.

**"இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெரு மறைப்பையும் பொழுது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது பயிலுதற்கு மணிதற்கும் மிகவுமிலே சுடைய தாய்ச் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து, அத் தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்!"** என்றவர் அவர்.

சங்கராச்சாரியார் அவர்கள், "சமசுகிருதமே மாத்ரு பாஷை' (இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி) என்று கூற, சட்டென்று நொடிப்பொழுதில் வள்ளலார், "சமசுகிருதம் மாத்ரு பாஷை என்பது உண்மையெனில், அதற்கு **'எமது தமிழே பித்ரு பாஷை'** (இந்திய மொழிகளிக்கெல்லாம் தந்தை மொழி) என்று பதிலடி தந்தார்.

**"ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்று பற்பல பாஷைகளைப் போலாகாமல் - பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாகவும், ஒலியிலே சாயும் கூட்டென்னும் சக்தி அதி சுலபமாயும் எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தங்களையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண் தன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் ற் ன் என்னும் முடி நடு அடி சிறப்பியலக் கரங்களில் முடிநிலை இன பாநுபவ சுத்த மோனா தீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கையுண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பிய யொலியாம்."** என்று தமிழைப் போற்றியவர் வள்ளலார்.

தமிழ் இன்னும் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி என்றும், தமிழ் மொழியே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும் என்றும் சொன்னவர் வள்ளலார். சமஸ்கிருதத்துக்கு பல்லாயிரம் கோடியும் தமிழ் வளர்ச்சிக்கு சில பத்துக் கோடியும் ஒதுக்கி விட்டு வள்ளலார் வழியில் நடப்பதாக மோடி சொல்வது மோசடி வழி அல்லவா?

'வள்ளலார் காட்டிய வழியில் ஒன்றிய அரசு செயல்படுகிறது' என்று பிரதமர் நரேந்திரமோடி சொல்லியதைப் படித்த பிறகு நெஞ்சு அடைக்கிறது. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில் கொரோனா காலத்தில் வாடினாராம் பிரதமர். அவரே சொல்லிக் கொள்கிறார்.

**லட்சக்கணக்கான மக்களை பல நூறு கிலோ மீட்டர் தூரம் நடக்க வைத்த கொடூரக் காலத்தை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். வடமாநில மக்கள் பட்ட துன்பத்தைத்தான் நாம் பார்த்தோம். நடந்தே போய் மயங்கிச் செத்தது 13 வயதான ஜம்லோ என்ற இளம்பிஞ்சு. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நடந்து போயே இறந்தார்கள். ரயில் வருவது தெரியாமல் ரயில் பாதையில் போய் மரணம் அடைந்தார்கள் மக்கள். இவர்களுக்காக உ.பி.யில் பேருந்துகள் ஏற்பாடு செய்தார் பிரியங்கா காந்தி. அதையும் தடுத்தார் அங்கிருந்த முதலமைச்சர் ஆதித்யநாத். இவர்களது பாதை எது என்பது தான் நமக்குத் தெரியுமே!**



சென்னை பெரியமேட்டைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ராஜீவ் அவருடைய மகள் ஹர்சினிக்கு ஹீமோபிலியா எனும் நோய் பாதிப்பு இருந்த நிலையில், அவருக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில், சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிறுமி ஹர்சினியை சமீபத்தில் நேரில் சந்தித்து நலம் விசாரித்த போது, ஹர்சினியின் குடும்பத்தினர், வீடற்ற நிலையில் சாலையோரம் வசிப்பதாகவும், சுகாதாரமான வாழ்வுக்கு அரசு தரப்பில் ஒரு வீடு வழங்க வேண்டுமென்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்ட துறைக்கு அவர் அனுப்பி வைத்த நிலையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சத்தியமூர்த்தி நகர் திட்டப்பகுதியில் ஹர்சினிக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான ஆணையை ஹர்சினியின் குடும்பத்தாரிடம் நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் காலை உணவுத் திட்டம்

# பெரிய சமூகப் பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவது நிச்சயம்!

## தஞ்சை விழாவில் ஜி.பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ். புகழாரம்!

தஞ்சை, அக். 9 – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகம் செய்துள்ள காலை உணவுத் திட்டம் மிகப் பெரிய பொருளாதாரப் புரட்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்று தஞ்சையில் நடந்த கலைஞர் நூற்றாண்டு விழாவில் ஜி.பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ். பேசுகையில் குறிப் பிட்டார்.



மேற்கு வங்க மேனாள் தலைமை செயலாளர் ஜி.பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

அவரது உரையில் குறிப்பிட்ட தாவது:

எதை வேண்டுமானாலும் கேள்வி கேட்க வேண்டும் என்பதுதான் பெரியாரின் வழி. அந்த வகையில் எதற்கு கலைஞர் 100? எதற்காக முதலமைச்சருக்கு பாராட்டு? என்று நீங்கள் கேள்வி கேட்க வேண்டும்

250 ஆண்டுகளுக்கு முன்னால் ஆபிரகாம் லிங்கனுடைய வீர உரையில் அனைவரும் சமம்.

ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவம் நமக்கு இருக்கிறது.

இறைவனை கூட எதிர்த்து குரல் கேட்கும் குணம் நம்மிடம் இருந்தது. இப்படி அனைவரும் சமம், கேள்வி கேட்க வேண்டும் என்ற சிந்தனை எல்லாம் 1000, 1500 ஆண்டுகளாக இல்லாமல் போகக் கூடிய நிலை, அப்படி மாறிய நிலைகளை மாற்றுவதற்காக தான் தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் அனைவரும் போராடினர்.

தமிழருக்கென்று தனியே ஒரு குணம் உண்டு என்று சொன்னால் அது அனைவரையும் சமமாக நினைக்கக் கூடிய குணமாக இருக்க வேண்டும் என்றார். சமமற்ற நிலையில் இருப்பவர்களுக்கு தேவை நிவாரணமும், நிரந்தர தீர்வும் தான். அந்த இரண்டையும் தந்தவர் கலைஞர்.

அந்த வழியில் தான் 'எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து நான்தான் முதலமைச்சர்' என்று வெற்றி பெற்ற முதல் நாளே நம்முடைய முதலமைச்சர் கூறினார் என்பதை நினைவுப்படுத்தி, சொல்வதை கூட செய்ய முடியாமல் இருப்பவர்கள் மத்தியில் சொல்லாததையும் சேர்த்து செய்து கொண்டிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

குறிப்பாக, இன்னும் 50 ஆண்டுகள் கழித்து பொருளாதார அறிஞர்கள் நிச்சயம் "காலை உணவுத் திட்டம்" என்பது எவ்வளவு பெரிய சமூக பொருளாதார புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறது என்று பேசுவார்கள்.

### இந்தியாவின் முதலமைச்சர்களில் முதன்மையானவர்

1969 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் மாநில அரசின் உரிமைகள் குறித்து ஆய்வு செய்ய 'ராஜமன்னார் கமிட்டி' அமைக்கப்பட்டது. அந்த கமிட்டி கொடுத்த பரிந்துரைகள் அனைத்தும் மாநில சுயாட்சி பெற வேண்டும் என்று ஒரு மாநிலம் நினைக்கின்ற போது தேவைப்படக்கூடிய அதிமுக் கிய அறிக்கை என்பதை பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கலாம்.

குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரால் ஒன்றிய அரசு கொண்டுவர நினைக்கும் கொடுமையை எடுத்துரைத்து அதற்கு மாற்றாக "மாநில கல்விக் கொள்கை" ஒன்றினை நமது முதலமைச்சர் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அந்த மாநில கல்விக் கொள்கை 50 ஆண்டுகளுக்குப் பிறகு மாநில சுயாட்சி பற்றி யாராவது பேச வந்தால் பேசுபொருளாக கூடிய கல்விக் கொள்கையாக நிச்சயம் அமையும். அப்படிப்பட்ட ஒரு கல்விக் கொள்கையை தான் நாம் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் வரலாற்றினை வென்றவர்கள் எழுதாமல், உண்மையை சொல்லுபவர்களால் எழுதப்பட வேண்டும். அப்படிப்பட்ட வரலாறாக முதலமைச்சரின் மாநில கல்விக் கொள்கை இருக்க வேண்டும். இந்திய நாட்டில் உள்ள முதலமைச் சர்களில் முதன்மை முதலமைச்சர் என்ற பெருமை நமது முதலமைச்சருக்கு இருக்கிறது, அவரை சுற்றி இருப்பவர்கள் அவரது நோக்கத்திற்கு அவரைப் போலவே உழைத்தால் தெற்கு ஆசியாவின் முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு இருக்கும் அதற்காக அவரோடு நாம் உழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# தூத்துக்குடியில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதை ஒப்பித்தல் போட்டி!

## அமைச்சர் கீதா ஜீவன் சிறப்புரை!

*தூத்துக்குடி. அக்.9- கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி போல்பேட்டை கீதா மெட்ரிக்பள்ளியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டக் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சரத்பாலா தலைமை வகித்தார்.*

*மாவட்ட துணைத்தலைவர் ஞானப்பிரகாஷம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சோமநாதன், மனோகரன், மாரியப்பன், தாமோதரகண்ணன், பாலமுருகன், ஆவுடையப்பன், மாநகர தலைவர் கணேசன், துணைத்தலைவர் சாமி, துணை அமைப்பாளர்கள் ஆனந்த், அற்புதராஜ், பழனி, சீதாலட்சுமி, ரமேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர அமைப்பாளர் மரிய ஜோன் பிரான்சிஸ் வரவேற்புரையாற்றினார்.*

*நிகழ்ச்சியை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூகநலன் மற்றும் பெண்கள் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்து பேசுகையில் புரட்சிக்கர மான வரலாறுகளை எதிர்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும். என்பதற்காக கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக முதலமைச்சர் தளபதியார் அறிவுறுத்தலின் படி நடைபெறுகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கருத்துக்கள் கவிதைகள் என பலவற்றின் மூலம் தமிழன் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். என்பதற்காக முத்தமிழ் அறிஞர் கலைஞர் தலை குணிந்து எழுதினார். 1998ல் முதல் முறையாக கனிணித்துறை மூலம் தமிழ்வழிக்கல்வி தொடங்கப்பட்டது. அது தான் இன்று உலக அளவில் தமிழர்களின் வாழ்வாதரம் உயர்வதற்கு காரணமாக அமைந்துள்ளது. தமிழ் மொழி செம்மொழி உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை படைத்தவர் கலைஞர் கடந்த காலத்தில் வாழ்ந்த தலைவர்களின் வரலாறுகளை இனிவரும் எதிர்கால தலைமுறையினருக்கு தெரிய வேண்டும். என்பதற்காக மாணவ மாணவிகளுக்கு இப்போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம். கலந்து கொண்ட அனைவரையும் பாராட்டுகிறேன். என்று பேசினார்.*

*விழாவில் தி.மு.க. மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் தில்லை செல்வம், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், துணைச் செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பிரமிளா, பொருளாளர் அனந்தையா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், பொருளாளர் ரவீந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ராஜா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் அந்தோணி ஸ்டாலின், வக்கீல் பாலகுருசாமி, வக்கீல் அசோக், ரமேஷ், விஸ்வநாதராஜா, சீனிவாசன், துணை அமைப்பாளர்கள் அந்தோணி கண்ணன், பிரபு, ராமர், பகுதிச் செயலாளர் ஜெயக்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், சேர்மபாண்டியன், மாநகர அணி அமைப்பாளர்கள் ஜீவன் ஜேக்கப், அருண்சுந்தர், சீதாராமன், துணை அமைப்பாளர்கள் கிறிஸ்டோபர் விஜயராஜ், ரவி, குமரன், இலக்கிய அணி சக்திவேல், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், கவுன்சிலர்கள் சரவணக்குமார், ஜாக்குலின்ஜெயா, நாகேஸ்வரி, விஜயகுமார், வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, பொன்னுச்சாமி, கருப்பசாமி, சேகர், முத்துராஜா, ராஜாமணி, சக்திவேல், சதீஷ்குமார், முன்னாள் கவுன்சிலர்கள் ஜெயசிங், குருசாமி மற்றும் கருணா, மணி, அல்பட், சத்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

*பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் கீதாஜீவன் பரிசு வழங்கினார். மாவட்ட தலைவர் இருதயராஜ் நன்றியுரையாற்றினார்.*




முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் – தலைவர் – துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநகர செயலாளர் சுப்பிரமணி, வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, கிழக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் பிரபாகர், சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன் ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமை கழக வழக்கறிஞர் சரவணன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## சாத்தியமா என்பதை சாதித்துக் காட்டியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

# ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவாக அணி திரளுங்கள்!

## மகளிர் அணி -மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**திருச்சி அக். 9 -**

**‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாட்டு சகோதரிகள் திரள வேண்டும் என துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.**




திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியின் புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கயல்விழி செல்வராஜ், மாவட்ட செயலாளர்கள் தியாகராஜன் எம்.எல்.ஏ., வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, அமலு, மகளிரணி செயலாளர்ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர்ரத்னா லோகேஷ்வரன், மகளிரணி துணைச் செயலாளர் பவானி இராஜேந்திரன், திருச்சி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மதனா, மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (7-10-2023 சனிக்கிழமை) திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியின் புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த கழக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணியில் புதிய நிர்வாகிகள் மத்தியில் கலைஞர் நூற்றாண்டை மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாடுவது, ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் நிர்வாகிகளை நியமிப்பது, புதிய உறுப்பினர்களை மகளிரணியில் இணைப்பது, பயிற்சி பாசறை உள்ளிட்ட மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள்.

அவரது உரையில் குறிப்பிட்டதாவது:-

“இங்கே தமிழரசி பேசும்போது ரோஜா மலர்களை போல அமர்ந்திருகிறீர்கள் என்று சொன்னார்கள். என் கண்ணுக்கு மலர்கள் தெரியவில்லை. தீப்பந்தங்கள்தான் தெரிகிறது, மலர்ந்தது போதும், இனி நாம் சுடர் விட்டு எரிவோம். இதுவே நாம் வகுத்துக் கொள்ள கூடிய கொள்கையாக, வரித்துக் கொள்ளக் கூடிய உறுதியாக இருக்க வேண்டும்.

திருச்சி என்று சொன்னாலே ஒவ்வொருவர் மனதிலும் எத்தனையோ நினைவுகள் நிழலாடும். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபடலாமா வேண்டாமா என்று முதன் முதலில் முடிவெடுத்த மண் இந்த திருச்சி மண் தான். மகளிர் அணியின் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்துக்கு இதை விட சிறப்பான வேறு ஓர் இடத்தை நாம் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

### பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது திராவிட இயக்கமே!

திராவிட இயக்கம் என்பது தொடர்ந்து பெண்களின் உழைப்பை மதிக்கக் கூடிய, பெண்களின் முன்னேற்றத்தில் அக்கறை இருக்கக் கூடிய பெண்களின் உரிமைகளுக்காக போராடக் கூடிய இயக்கமாக நமது திராவிட இயக்கம் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

உலகம் முழுதும் இருக்கும் நாடுகளில் ஓட்டுரிமை என்று வந்தபோது பெண்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. ஓட்டுரிமைக்காக உலகத்தின் பல நாடுகளில் பெண்கள் எவ்வளவோ போராட்டங்களை செய்ய வேண்டியிருந்தது. தெருவிலே இறங்கிப் போராடினார்கள், அடிபட்டார்கள், சிறை சென்றார்கள், வசைபாடப்பட்டார்கள், மிக அசிங்கமாக நடத்தப்பட்டார்கள். முன்னேறிய நாடுகள் என்று சொல்லக் கூடிய பல நாடுகளில் பெண்கள் ஓட்டு போடுவதற்கு இவ்வளவு போராட வேண்டியிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் ஆட்சியிலே இருந்தபோது நீதிக் கட்சி ஆட்சியிலே இருந்தபோது எந்த போராட்டமும் இல்லாமல் பெண்களுக்கு வாக்குரிமை என்ற நிலையை உருவாக்கிக் காட்டியது.

### பெரியாரை மிஞ்சிய பெண் விடுதலையாளர் இல்லை!

உலகில் எத்தனையோ பெண் போராளிகளை படித்திருக்கலாம், எத்தனையோ பெண்களின் போராட்ட வரலாற்றை படித்திருக்கலாம். ஆனால் பெண்ணுரிமை பேசிய தலைவர்களில் பெரியாருக்கு நிகரான தலைவரை உலகத்தில் நீங்கள் எங்குமே பார்க்க முடியாது. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் உன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு எது தடையாக இருந்தாலும் அதை உடைத்து எறி. உனக்கும் உன் கனவுக்கும் இடையே எது வந்தாலும் அதை புறந்தள்ளு... நீ அடையவேண்டிய லட்சியத்தை அடைவதற்கு எதுவும் தடையாக இருக்கக் கூடாது. இதைச் சொன்னவர் தந்தை பெரியார். இதைத் தாண்டி பெண்ணுரிமை பற்றி பெண் விடுதலை பற்றி வேறு எதுவுமே பேச முடியாது.

### கலைஞரும், தளபதியும் உருவாக்கிய பெண்ணுரிமைத் திட்டங்கள்!

பெரியார் வழியிலே வந்த தலைவர் கலைஞர் பெண்களுக்கு சொத்துரிமை சட்டம் கொண்டுவந்தார். பெண்களின் கல்விக்காகவே திருமண உதவித் தொகை திட்டத்தை கொண்டுவந்தார். இதை நமது முதலமைச்சர் தளபதி அண்ணன் அவர்கள் அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்று கல்லூரிகளில் படிக்கும் இளம்பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்று வழங்கி, பெண்களின் உயர் கல்வியை பாதுகாக்கக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறார்.

உலகில் பல ஆய்வுகளின் முடிவுகள் என்ன சொல்கின்றன என்றால், பெண் வீட்டை விட்டு வெளியே வரும்போது தான் அவளுடைய உண்மையான விடுதலை பிறக்கிறது. ஒரு காலத்தில் பெண்கள் வீட்டிலேயே இருந்தார்கள், சுயமாக சம்பாதிக்க முடியாத நிலை. நம் கையில் ஒரு நான்கு காசு இருந்தால் நாமும் மரியாதையாக நடத்தப்படுவோம் என்று தினம் தினம் வருத்தத்தை சுமந்த நாட்கள் உண்டு. அப்போதுதான் கலைஞர் மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதன் மூலம் பெண்கள் கையில் பணம் வந்தது. பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்று வங்கிக்குப் போய் அதிகாரிகளைப் பார்த்து அவர்களோடு உரையாடும் தைரியம் வந்தது. அப்போதெல்லாம் வீட்டில் ஏதாவது விவாதம் நடக்கும்போது பெண்களின் கருத்துகளை கேட்கவே மாட்டார்கள். ஆனால் அதன் பிறகு பெண்களும் கருத்து சொல்லும் நிலை ஏற்பட்டது. ‘உனக்கு ஒண்ணும் தெரியாது’ என்று வீட்டில் யாராவது சொன்னால், ‘எனக்கும் எல்லாம் தெரியும். நானும் வெளியே சென்று வருகிறேன்’ என்று சொல்லும் தைரியம் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக குழாயில் தண்ணீர் வரவில்லை என்றால் எதிர்த்துக் கேட்டீர்கள். தெருவிளக்கு எரியவில்லை என்று சொன்னால் கேட்டீர்கள். பிரச்சினைகளை எதிர்த்து நின்று அதற்கு தீர்வு காணக் கூடிய தைரியத்தை பெற்றுத் தந்தது அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தந்த பொருளாதார சுதந்திரம்தான்.

இதன் தொடர்ச்சியாக உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை தலைவர் கலைஞர் கொண்டுவந்தபோது, அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்குள் கிட்டத்தட்ட 50% பெண்கள் வெற்றி பெற்றுக் காட்டினார்கள். அதற்குப் பிறகுதான் 50% இட ஒதுக்கீடு சட்டமே வந்தது. அந்த சட்டம் வருவதற்கு முன்பே 33% என்பதை கடந்து காட்டியவர்கள் பெண்கள்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து தங்களால் சாதிக்க முடியும் என்பதை செய்து காட்டியவர்கள் தலைவர் கலைஞரும், அண்ணன் தளபதியும். கதவைத் திறந்து விடுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்தவர்கள். இந்த அடிப்படையில்தான் நமது முதலமைச்சர் பெண்களுக்கு நகரப்புற பேருந்துகளில் கட்டணம் இல்லை என்ற நிலையை உருவாக்கினார். கொரோனாவுக்கு பிறகு ஒவ்வொரு குடும்பத்திலும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டது. வெளியே போக வேண்டும் என்றால் பஸ்ஸுக்கு செலவாகும் வெளியே போகாதே என சொல்லுவார்கள். அந்த நிலை கூட பெண்களுக்கு வந்துவிடக் கூடாது, அவர்களின் விடுதலைக்கு தடை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் பேருந்துகளில் கட்டணம் கிடையாது என்ற நிலையை முதலமைச்சர் உருவாக்கினார்.

நிறைய ஆண்களுக்கு வருத்தம்... ஏன் பெண்களுக்கு மட்டும் கட்டணம் கிடையாது, ஆனால் எங்களுக்கு மட்டும் கேட்கிறார்கள் என்று. இந்தத் தடையை தாண்டியாக வேண்டிய நிலையில் இருப்பது பெண்கள்தான் என்பதால்தான் பெண்களுக்கு கட்டணம் இல்லை. ஆண்கள் யாரும் வெளியே போவதற்கு யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. ஆனால் அந்த தடை பெண்களுக்கு இன்னும் இருக்கிறது. அதனால்தான் பெண்களின் முன்னேற்றத்துக்கு இருக்கும் தடைகளை ஒவ்வொன்றாக உடைப்பது திராவிட முன்னேற்றக் கழகம்.

இப்படி பெண்களுடைய முன்னேற்றதுக்காக சிந்தித்து தொடர்ந்து திட்டங்களை தந்து வருகிறார் முதலமைச்சர். இப்போது நாம் செயல்படுத்தியிருக்கும் மகளிர் உரிமைத் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் என்பது பெண்களுக்கான நலத் திட்டங்களில் முதன்மையான திட்டம். இதை நாம் தேர்தல் அறிக்கையிலே அறிவித்தபோது... எல்லாரும் மலைப்பாக பார்க்கக் கூடிய திட்டமாக, இது சாத்தியமா என்று சிந்திக்க கூடிய திட்டமாக இருந்தது. ஆனால், இன்று அந்தத் திட்டத்தை செயல்படுத்திக் காட்டியிருக்கக் கூடிய முதலமைச்சர் நமது அண்ணன் தளபதி.

இந்த ஆயிரம் ரூபாய் என்பது பெண்களின் சிந்தனையை, தன்னம்பிக்கையை உயர்த்தக் கூடிய ஒன்றாக நிச்சயமாக இருக்கும். என் அக்கவுன்ட்டில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது என்றால் எனக்கு சரி என்று பட்ட விதத்திலே நான் அதை பயன்படுத்த முடியும். என் பெண்ணுக்கு படிக்க செலவு பண்ண முடியுமா, முடியும். நான் வைத்தியம் பார்த்துக் கொள்ள மருத்துவமனைக்கு செல்ல முடியுமா, முடியும். என் தாய்க்கு தந்தைக்கு செலவு செய்ய முடியுமா? யாரையும் கேட்காமல் அவர்களுக்காக செலவு செய்ய முடியும். இது என்னுடைய உரிமை. அதனால்தான் இது உரிமைத் தொகை. உதவித் தொகை அல்ல.

ஆயிரம் ரூபாய் வந்தவுடன் இதை வைத்து இன்னும் எப்படி சொந்தக் காலில் நின்று இன்னும் சம்பாதிக்கலாம் என்று பெண் சிந்திக்கத் தொடங்குவாள். அது அந்த பெண்ணை மட்டுமல்ல, அவளுடைய மகள், சகோதரிகளையும் சொந்தக் காலில் நிற்கத் தூண்டுவாள். இப்படி ஒவ்வொரு நாளும் பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம்.

### பெண்களுக்கு எதிரான ஒன்றிய ஆட்சி!

ஆனால் டெல்லியிலே ஒரு அரசு இருக்கிறது. இரு முறை பாஜக ஒன்றியத்திலே ஆட்சி நடக்கிறது. நாம் கூட டெல்லியிலே மகளிர் இட ஒதுக்கீட்டு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று போராட்டம் நடத்தினோம். ஆனால் இத்தனை ஆண்டுகளில் நாடாளுமன்ற செயல் திட்டப் பட்டியலில் கூட அது இல்லை.

இப்போது திடீரென்று விநாயகர் சதுர்த்தி அன்று புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டினார்கள். ஏன் கூட்டுகிறார்கள் என்று யாருக்குமே தெரியவில்லை. யாருக்குமே காரணம் சொல்லாமல் மூடு மந்திரமாக அந்த அவைக் கூட்டத்தைக் கூட்டுகிறார்கள். அதற்குப் பிறகும் என்னபில் வருகிறது, எதைப் பற்றி பேச வேண்டும் என்று எந்த தகவலும் இல்லை. கூட்டத் தொடர் தொடங்கிய பிறகு மகளிர் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்படும் என்று அறிவிப்பு வருகிறது. இத்தனை ஆண்டுகளாக நாம் கேட்டும் வாயே திறக்கவில்லை. இருந்தாலும் இப்போது திடீரென கண்டுவருகிறார்கள் என்றபோது எல்லாருக்கும் மகிழ்ச்சி. யாருமே எதிர்க்கவில்லை.

காங்கிரஸாக இருக்கட்டும், திரிணமூலாக இருக்கட்டும், திமுகவாக இருக்கட்டும் எல்லாரும் அதை ஆதரிப்பதாக சொன்னோம். மசோதாவை படித்துப் பார்த்தபோது... ஏற்கனவே நம்முடைய ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலே கொண்டுவரப்பட்டபோது சட்டத்திலே நிபந்தனைகள் கிடையாது. ஆனால் இப்போது, இதை கொண்டுவர வேண்டுமென்றால் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், அதன் பின் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அதன் பிறகுதான் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நடைமுறைக்கு வரும். மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடக்கும் என்று இப்போது வரை யாருக்கும் தெரியாது. அது எவ்வளவு பெரிய செயல்பாடு. அது எத்தனை ஆண்டுகள் நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. எப்போது ஆரம்பித்து எப்போது முடியும் என்றும் தெரியாது.

### தென் மாநிலங்களின் பிரச்சினை!

இதில் தென்னாட்டு மாநிலங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. ஏனென்றால் நாம் ஆட்சி ஒழுங்காக நடத்தியிருக்கிறோம்,. தமிழ்நாடு பல்வேறு வகையில் முன்னேறியிருக்கிறது. மக்கள் தொகையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நம்முடைய மக்கள்தொகை குறைந்திருக்கிறது. அதனால்தான் கல்வி அதிகரித்து ஒவ்வொரு துறையிலும் முன்னேறியிருக்கிறோம். இதையெல்லாம் சரியாக செய்திருக்கக் கூடிய நமக்கு மக்கள் தொகை குறைந்திருக்கிறது. ஆனால் வட மாநிலங்கள் இதையெல்லாம் சரியாக செய்யாததால் அங்கே மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது.

இந்தன் நிலையில் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி வரையறை என்று வந்தால் பாதிக்கப்படுவது தமிழ்நாடு போன்ற மாநிலங்கள்தான். அதனால் அதை எதிர்த்து நாம் போராடுவோமோ மாட்டோமா? போராடுவோம், போராட வேண்டும். இப்படி இத்தனை பிரச்சினைகளோடு மகளிர் இட ஒதுக்கீடு என்ற சட்டத்தைக் கொண்டுவரும்போது இது வெறும் கண் துடைப்பு என்று நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

### பெண்கள்தான் முதலில் போராட வேண்டும்!

இப்படி எதைச் செய்தாலும் மக்களை ஏமாற்றும் வகையிலேயே செயல்படுகிறது ஒன்றிய பாஜக அரசு. மணிப்பூரில் பெண்களின் நிலை என்ன? மக்களின் நிலை என்ன? அரசியலுக்காக ஒவ்வொரு மாநிலத்திலும் மக்களை சாதி வாரியாக மத வாரியாக பிரித்து வைக்கிறார்கள். எல்லாரும் சமமாக ஒன்றாக வாழ வேண்டும் என்பதுதான் திராவிட மாடல்,. ஆனால் ஒருவரை ஒருவர் வெறுக்கும் அரசியலை கொண்டுவருவது அவர்கள். இப்படிப்பட்ட கலவரங்களிலே முதலில் பாதிக்கப்பது பெண்கள்தான்.

எந்த இடத்திலே ஆணவம் தலை தூக்குகிறதோ, அதிகாரம் தலை தூக்குகிறதோ அது முதலில் பெண்களுக்கு எதிராகத்தான் முதலில் இருக்கும். இந்த ஆட்சி நாட்டில் எங்கேயும் மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதற்காக பெண்கள்தான் முதலில் போராட வேண்டும். ஏனென்றால் ஒன்றிய ஆட்சி பெண்களுக்கு எதிரான, பெண்கள் தலை நிமிர்ந்து வாழ முடியாத, பெண்கள் தங்கள் உரிமைகளை பெற முடியாத ஆட்சி. இப்படிப்பட்ட ஆட்சி மீண்டும் நாட்டில் அமைந்துவிடக் கூடாது என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டு நாம் தேர்தலிலே பணியாற்ற வேண்டும்.

### அக்டோபர் 14 ஆம் தேதி சகோதரிகள் திரள வேண்டும்!

பெண்களுடைய குரலை எல்லாம், பெண் தலைவர்களின் குரலை எல்லாம் ஒட்டுமொத்தமாக வரக் கூடிய அக்டோபர் 14 ஆம் தேதி அன்னை சோனியா காந்தி தொடங்கி இந்தியாவின் அத்தனை பெண் தலைவர்களும் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி தலைமையிலே சென்னையில் ஒரு மாபெரும் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அந்த கூட்டத்திலே இன்று பெண்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள், போராட்டங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி பேச இருக்கிறோம். கலைஞர் நூற்றாண்டு விழாவாக இருப்பினும் அதில் பெண்களின் பிரச்சினைகளை பேச இருக்கிறோம். அந்த கூட்டத்தில் நீங்கள் அத்தனை பேரும் கலந்துகொண்டு ’இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாட்டு சகோதரிகள் திரண்டு வரவேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

### வினாடி வினா முதல் பரிசு ரூபாய் பத்து லட்சம்!

அதுமட்டுமல்லாமல்... இங்கே நம் திராவிட இயக்கத்தின் வரலாற்றை இளைஞர்கள், மாணவர்கள் எல்லாரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மகளிர் அணி சார்பாக வினாடி வினா நிகழ்ச்சி நடத்துகிறோம். இதில் முதல் கட்ட வினாடி வினா நிகழ்வில் இணைய தளம் மூலமாக பங்கேற்க வேண்டும். இங்கே வந்திருக்கக் கூடிய மகளிரணி சகோதரிகளின் வீடுகளில் இருப்பவர்கள், உங்கள் நண்பர்கள், உங்கள் ஊரில் இருப்பவர்கள், உங்கள் பகுதியிலே இருக்கும் கல்லூரிகளே படிக்கும் மாணவிகள் என அத்தனை பேரும் கலந்து கொண்டு பரிசுகளை பெற வேண்டும்.

18 வயதுக்கு கீழே, பதினெட்டு வயதுக்கு மேலே என்ற பிரிவுகளில் மூன்று மூன்று பேராக இந்த வினாடி வினா நிகழ்விலே பங்கேற்றுக் கொள்ள முடியும். இந்த வினாடி வினாவின் முதல் பரிசு பத்து லட்ச ரூபாய். இன்னும் எத்தனை பேருக்கு நமது செய்திகளை நமது வரலாற்றை கொண்டு போய் சேர்க்க முடியுமோ அதை செய்யக் கூடிய நிகழ்ச்சியாக இந்த வினாடி வினா நிகழ்வை வடிவமைத்திருக்கிறோம். இதை நமது மகளிரணி சகோதரிகள் தீவிரமாக மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

### நாம் எல்லாரும் சமமே

சிலர் மகளிரணியிலே இருக்கிறீர்கள், சிலர் மகளிர் தொண்டரணியிலே இருக்கிறீர்கள். சிலர் சமூக வலைதளப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். இன்னும் அதிகமான சகோதரிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை செய்திருக்கிறோம். அதனால் இதில் எந்த வித்தியாசமும் கிடையாது. தொடர்ந்து பெண்கள் சந்திக்கும் பிரச்சினை என்னவென்றால்... நாமெல்லாம் கீழே மற்றவர்கள் எல்லாம் மேலே. ஆண்களுக்கு சமமாக பார்க்கப்படுவதில்லை. அதனால் நாமாவது ஒருத்தரை மேலே கீழே என்று பார்க்காமல் எல்லாரும் சமம் என்று பார்த்து எல்லாரும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குதான் பணியாற்றுகிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எல்லாரும் என்னுடைய உயிர் மூச்சை போன்றவர்கள்.

### உடைந்துபோகாதீர்கள்... கடந்து செல்லுங்கள்!

இன்னொன்று யாராவது உங்களைப் பற்றி பேசிவிட்டால் உடைந்துபோய் விடுகிறீர்கள். உங்களைப் பற்றி உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை பற்றி யாராவது பேசிவிட்டால் உடைந்து போய் விடுகிறீர்கள். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன். நம்மைப் பற்றி தவறான பேசுகிறவனுக்கோ, பேசுகிறவர்களுக்கோ அதற்கான தகுதி இருக்கிறதா என்றால் கிடையாது. நீங்கள் யார் என்பது உங்களுக்கு மட்டும்தான் தெரியும். நம் பின்னாடி நம்மை தவறாக பேசுகிறான் என்றால் அவனுக்கு வேலை கிடையாது. நமக்கு வேலை நிறைய இருக்கிறது. பேசுகிறவர்கள் பேசட்டும்... நாம் உடைந்து போக வேண்டும் என்பதற்காக நம் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நாம் கடந்து போக வேண்டும். அதற்காக நாம் போராடுவதை விட்டுவிடக் கூடாது.

நாம் ஒற்றுமையாக நிற்க வேண்டும். இங்கே இருக்கும் சகோதரிகள் ஒருவர் விழும்போது இன்னொருவர் கை நீட்டி தாங்கிப் பிடிக்க வேண்டும். மற்றவர்கள் அந்த பெண் மீது சேறு வீசும்பொது அரணாக நிற்க வேண்டியது இன்னொரு சகோதரி. நாம் அவர்களுக்காக நிற்கவில்லை என்றால், நமக்காக யாரும் நிற்க மாட்டார்கள். ஏனென்றால் நம்மை சொல்லும் சொல் நமது சகோதரிகள், நமது குழந்தைகள் என்று மாறும். யாரையும் எந்த காலத்திலும் எந்த இடத்திலும் நாம் நம்மை விட்டுக் கொடுக்க முடியாது. ஒரு பெண்ணைப் பற்றி தவறாக பேசினால் அனைவரும் இறங்கி நின்று சண்டை போட வேண்டும். நம்மால் சிந்திக்க முடியும், பேச முடியும். பதிலடி தர முடியும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அரணாக நில்லுங்கள்.

ஆனால் அதேநேரத்தில் நமக்கு ஒரு பிரச்சினை வருகிறது என்றால்... உறுதுணையாக இருக்கக் கூடிய பொறுப்பாளர்கள், அமைப்பாளர்கள் இருக்கிறார்கள் அவர்களிடம் பேசுங்கள். அவர்களிடம் பேச முடியவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். நம்முடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும், நம் பிரச்சினைகளுக்கு தீர்வே இல்லை என்பது மாதிரி பகிரங்கமாக பேசாதீர்கள். நம் இயக்கத்துக்கு எதிராக நாம் செயல்படக் கூடாது. நம் எல்லாருக்கும் அடிப்படைத் தளம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

அதுபோல நான் இத்தனை வருடங்களாக வேலை செய்திருக்கிறேன்... எனக்கு தேர்த்லில் நிற்க வாய்ப்பில்லை, எனக்கு பதவி இல்லை, அங்கீகாரம் இல்லை என்றும், இயக்கத்துக்கு வந்த உடனேயே பதவி இல்லை, அங்கீகாரம் இல்லை என்று நினைத்து சிலர் விலகிப் போகும் நிலைக்கு மாறிவிடுகிறார்கள்.

இங்கே மேடையில் இருக்கும் முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு கட்சிக்கு வந்தவுடன் எந்தப் பொறுப்பும் கிடைக்கவில்லை. இப்போது மேடையில் இருக்கும் சகோதரிகளுக்கு உடனடியாக எந்த வாய்ப்பும் கிடைத்துவிடவில்லை. சிலருக்கு தாமதமாக கிடைத்தது. சிலருக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனினும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்க கூடியவர்கள்தான் இங்கே இருக்கக் கூடியவர்கள். சிலர் பொறுப்பு தந்தாலும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு கழகப் பணி ஆற்றுவதே போதும் என்றும் செயல்பட்டு வருகிறார்கள்.

### கடமைகள் காத்திருக்கின்றன

இந்த மாத இறுதிக்குள் உங்கள் மாவட்டத்தில் ஐம்பதாயிரம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. அமைப்பாளர் பார்த்துக் கொள்வார் என்று துணை அமைப்பாளர் இருக்க கூடாது. அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று இருந்துவிடக் கூடாது. மகளிரணி, தொண்டரணி, இணைய வலை தள அணி என்று அனைவரும் சேர்ந்து செய்யுங்கள். தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்துங்கள், சின்ன நிகழ்ச்சியாக இருந்தால் கூட நடத்துங்கள். பத்து பேர், ஐம்பது பேர் கலந்து கொண்டால் கூட போதும், ஆனால் தொடர்ந்து மக்களோடு தொடர்பில் இருங்கள். அவர்களுக்கு சின்னச் சின்ன உதவிகள் செய்யுங்கள்.

பெண்கள் நாம் சமையலறை வரை சென்று வாக்கு கேட்க முடியும் என்று சொல்லுவார்கள். அதே நேரத்தில் இந்த நிகழ்வின் அழைப்பிதழில் பின் பக்கத்தில் பெரியார் சொன்னது அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ‘ தாய்மார்கள் எல்லாம் நாளைக்கு ஏரோ பிளென் ஓட்டணும், சந்திரமண்டலத்துக்கு போய் குடியிருக்க வேணும். முடியுமானு கேப்பீங்க. ஏன் கேட்குறீங்க? எதுவும் முடியும்’ என்று சொல்லியிருக்கிறார் பெரியார்.

அதனால் அடுத்த சந்திராயனில் போய் நிலவில் கால் வைக்கக் கூடியவர்களாக, இந்த நாட்டில் அத்தனை மேடையிலும் இருக்கக் கூடியவர்களாக, அனைத்து பொறுப்புகளிலும் மிளிரக் கூடியவர்களாக நம்மால் முடியும், தன்னம்பிக்கையோடு செயல்படுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகளுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்!

இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கயல்விழி செல்வராஜ், மாவட்ட செயலாளர்கள் தியாகராஜன் எம்.எல்.ஏ., வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, அமலு, திமுக மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ்வரன், மகளிரணி துணைச் செயலாளர் பவானி இராஜேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!





கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளியில் பட்டாசு கடை விபத்தில் பலியானவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அர சக்கரபாணி நேரில் சென்று ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினர். உடன் மாவட்டச் செயலாளர் ஒய் .பிரகாஷ் எம்.எல்.ஏ., மேயர் சத்யா உடன் இருந்தனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டம் - அத்திப்பள்ளியில்

# பட்டாசு விபத்தில் 14 பேர் பலி! குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதி உதவி

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - அர.சக்கரபாணி வழங்கினர்

கிருஷ்ணகிரி, அக்.9

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளியில் ஏற்பட்ட பட்டாசு வெடி விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களையும் நேரில் சந்தித்து அமைச்சர் பெரு மக்கள் ஆறுதல் கூறினார்கள்.

அத்திப்பள்ளியில் பட்டாசு குடோன் வெடித்த விபத்தில் இறந்து போன 14 நபர்களின் உடல்கள் அத்திப்பள்ளி ஆக்ஸ்போர்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் இறந்தவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பொது நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலைகளையும் பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனை மற்றும் விக்டோரியா மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் மூன்று நபர்களுக்கு நிதி உதவிகளையும் வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

இந்த சந்திப்பின்போது கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு. தளி எம்.எல்.ஏ.ராமச்சந்திரன், ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரோஜ் குமார் தாகூர் ஒசூர் சார ஆட்சியர் திருமதி ஆர். சரண்யா இணை இயக்குனர் நலப் பணிகள் பரமசிவம் கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பூவதி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.ரமேஷ் குமார் தர்மபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்பிரமணி தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பழனியப்பன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பு அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## அமைச்சர் மா.மதிவேந்தன்-எஸ்.எம்.மதுரா செந்தில் - சே.மெ.மதிவதனி பங்கேற்பு

நாமக்கல், அக். 9 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோடு சங்ககிரி சாலையில் உள்ள நந்தா டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார்.

திருச்செங்கோடு நகர கழக செயலாளர் தா.கார்த்திகேயன் வரவேற்புரை ஆற்றினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் மு.பரமானந்தம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழக செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஆர். தமிழ்தாரணி நன்றி கூறினார். கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டதற்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது,

கலைஞர் உரிமைத் தகை திட்டம் மூலம் மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த குடும்ப தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது,

திராவிட மாடல் ஆட்சியில் தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை விளக்கி மாவட்ட சார்பு அணிகள் சார்பாக அனைத்து இல்லங்கள் தோறும் துண்டு பிரசுரங்கள் வழங்கிட வேண்டும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, வாக்குச்சாவடி மையங்களில் வாக்குசாவடி முகவர்களுடன் இணைந்து சார்பு அணி நிர்வாகிகள் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல் பணிகளில் ஈடுபடடுவது, சேலத்தில் வரும் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில்,நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு பத்தாயிரம் இளைஞர்களை ஒன்று திரட்டி வெண் சீருடையில் கலந்து கொள்வது, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய நகர பேரூர்களில் அனைத்து சார்பு அணி நிர்வாகிகளை நியமித்து, கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் பெரும் பங்கு வகிக்கும் I.N.D.I.A கூட்டணி வெற்றி பெற சார்பு அணி நிர்வாகிகள் அயராது பாடுபடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சிக்கிம் மாநிலத்தில் கனமழை!

சிக்கிம், அக்.9-

சிக்கிமில் அண்மையில் மேக வெடிப்பு காரணமாக திடீரென கனமழை கொட்டித் தீர்த்தது. இதில் ஏராளமானோர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட நிலையில், அவர்களின் சடலங்கள் தற்போது கரை ஒதுங்கி வருகின்றன. ஏற்கெனவே 26 பேர் பலியான நிலையில், தற்போது மேலும் 27 பேரின் சடலங்கள் அண்டை மாநிலமான மேற்கு வங்கத்திலுள்ள தீஸ்டா நதிகரையோரம் கரைஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

அதில் 7 பேரின் அடையாளம் கண்டறியப்பட்ட நிலையில், மற்றவர்கள் யாரென தெரியவில்லை. புதிதாக கண்டெடுக்கப்பட்ட 27 பேரின் சடலங்களையும் சேர்த்து, சிக்கிமில் கனமழை வெள்ளத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 53ஆக அதிகரித்துள்ளது.

இதுதவிர்த்து மேலும் 50 பேருக்கும் மேல் காணவில்லை. இதனால் அவர்களை தேடும் பணியும் தீவிரமாக நடைபெறுகிறது.

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை

தென்காசி.அக்.9-

தென்காசி வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ஹம்சா ஹாலில் மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று ஆலோசனை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சரவணன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை, புனிதா, மாவட்ட பொருளாளர் இல.சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவதாஸ்,மாரிச்சாமி, பராசக்தி, சாகுல்ஹமீது, வெள்ளைச்சாமி பாண்டியன்,மகேஸ்வரி,பி.மாரிச்சாமி,

ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,பெரியதுரை,வெற்றி விஜயன், கிறிஸ்டோபர்,சேர்மதுரை, கடற்கரை,முத்தையா பாண்டியன்,பூசை பாண்டியன், ராமச்சந்திரன்,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ், அந்தோணிசாமி,பேரூர் கழக செயலாளர்கள் மாரிமுத்து,டாக்டர் செண்பக விநாயகம்,குருசாமி, பால சுப்பிரமணியன்,நகர்மன்ற தலைவர்கள் உமா மகேஸ்வரி,விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு இறுதி வாக்காளர் பட்டியல் 01.01.2024 அன்று வெளியிட உள்ளதால் அதற்கு முன்னதாக புதிய வாக்காளர்கள் சேர்த்தல்,நிக்கல், உள்ளிட்ட பலவித பணிகள் 27.10-2023 முதல் 09.12.2023 வரை நடைபெறுகிறது.

இதில் வருகிற 04.11.2023 சனி, 05.11.2023 ஞாயிறு மற்றும் 18.11.2023 சனி, 19.11.2023 ஞாயிறு ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளதால் இப்பணிகளில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) மற்றும் வாக்குச்சாவடி பணி குழுவினர்(BLAC) தேர்தல் பணிகளில் தீவிர ஈடுபாடு செய்வதை கண்காணித்து வர தீர்மானிக்கப்படுகிறது.

விரைவில் நடைபெற உள்ள கூட்டுறவு சங்க தேர்தல் சம்பந்தமாக மாவட்ட கழகம் ஆலோசனையின்படி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை.அது தொடர்பாக ஆலோசனைகள் மேற்கொள்வது என்றும்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அனைத்து கிளைகளிலும் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டுடன் கூடிய புதிய கொடிக் கம்பங்கள் அமைக்க வேண்டும். கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்றும்.

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக த்தின் உத்தரவின்படி வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ள 40 நாடாளுமன்ற தொகுதிகளையும் வெற்றி பெறுவதோடு,தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் திமுக மிகப்பெரிய வெற்றியை பெறும் வகையில் இப்பொழுது முதல் அரசின் மகளிர் தொகை மற்றும் அரசின் சாதனைகளை மக்களிடத்தில் கொண்டு சென்று தேர்தல் பணியாற்ற வேண்டும் என்றும்.

தேர்தல் தொடர்பான பணி செய்ய நியமிக்கப்படும் பாகமுகவர்கள்(BLC) 10 நபர்களில் ஒரு இளைஞர் அணி பொறுப்பாளர் நியமனம் செய்ய வேண்டும் என்றும்.

கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான பணிக்கு குழு அமைப்பதில் 2 வழக்கறிஞர்கள்,2 கட்சி மூத்த நிர்வாகிகள் மற்றும் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கழக உறுப்பினர் ஒருவர் நியமனம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் காணொலிக் கூட்டம்!

## அணிச் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர் ஒருங்கிணைப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று (9.10.2023 - திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற இருக்கிறது.

அனைவரும் தவறாமல் அந்தந்த மாவட்ட/தொகுதி அலுவலகங்களில் காணொலி வாயிலாகக் கலந்து கொள்ள வேண்டுகிறோம். மேலும் அனைத்து மாநில துணைச் செயலாளர்களும் தங்களது மாவட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

பொருள்:

1. அணி நிர்வாகிகள் தன்னார்வலர்கள் அறிமுகக் கூட்டம்.

2. கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
**செயலாளர்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ. வீராசாமி
### அக்டோபர் 9 (2020)



**தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.**

**நாகை நகர வீடு கட்டுவார் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி
### அக்டோபர் 9 (1992)



**திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கலைஞர் அன்று 'யு.பி.ஏ.'வை உருவாக்கினார்; முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று 'இந்தியா'வை உருவாக்கியுள்ளார்!

## பிரதமர் மோடி எங்கு சென்றாலும் முதல்வரைத் தாக்குவது அச்சத்தின் அறிகுறி!

# அகில இந்தியாவிற்கும் வழிகாட்டக் கூடியவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

## தஞ்சையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி உரை!

**தஞ்சை, அக்.9– அன்று கலைஞர் 'யு.பி.ஏ.'வை உருவாக்கியதுபோல, இன்று நமது முதலமைச்சர் 'இந்தியா'வை உருவாக்கியுள்ளார். அதுதான் நாட்டை அடுத்து ஆளப்போகிறது. அதனால்தான் எங்கு சென்றாலும் பிரதமர் மோடி நமது முதல் அமைச்சரை தாக்கிப் பேசுகிறார். அது அச்சத்தின் அறிகுறி என்றும் அகில இந்தியாவிற்கும் வழிகாட்டக் கூடியவராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.**

தஞ்சையில் 6.10.2023 அன்று மாலை நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா – சமூகநீதிக்கான சரித்திர நாயகர் திராவிட மாடல் ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையுரையாற்றினார்.

அவரது தலைமையுரை வருமாறு:

''கடிகாரம் ஓடும்முன் ஓடு'' என்று புரட்சிக் கவிஞர் நீண்ட நாள்களுக்குமுன்பு கட்டளையிட்டது, இந்த மேடைக்கும் அவசியமாகிறது என்கின்ற காரணத்தினால், அனைவரையும் விளித்ததாக, எனக்கு முன்னால் வரவேற்புரை கூறி, மற்றவர்கள் சொன்னதைப்போல, அத்தனைப் பேரையும் விளித்ததாகக் கருத வேண்டுகிறேன். அன்புச் சகோதரர்கள், ஆன் றோர் பெருமக்கள், அறிஞர்கள் அத்துணை பேரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அன்போடும், பாசத்தோடும், உரிமையோடும் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

**தாய்க்கழகத்தினுடைய உரிமையான கட்டளையை, அன்புக்கட்டளையை...**

இவ்வளவு பெரிய நிகழ்ச்சிக்கு ஒரு நாள் ஒதுக்கி, பல்வேறு பணிகளுக்கிடையில், தாய்க்கழகத்தினுடைய உரிமையான கட்டளையை, அன்புக்கட்டளையைத் தட்டமாட்டேன் என்பதற்காக இங்கே வந்து தன்னுடைய நேரத்தை ஒதுக்கித் தந்து, விரைவில் அவர்கள் விமானத்தில் போகவேண்டிய அவசியத்தில் இருக்கின்றது.

இங்கே உரையாற்றிய பெருமக்களே, மேடையில் அமர்ந்திருக்கின்ற சான்றோர்களே, அறிஞர்களே, எதிரில் இருக்கின்ற நம்முடைய இரட்டைக் குழல் துப்பாக்கியாகவும், அரசியலில் கூட்டணிக் கட்சியாகவும் இருக்கக் கூடிய அருமைப் பெரியோர்களே, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தாய்மார்களே, சகோதரிகளே, நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எங்களுடைய தலைதாழ்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**17 ஆண்டுகளுக்கு முன்னால்...**

இந்நிகழ்ச்சி, தஞ்சை வரலாற்றிலேயே ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் அவர்களுக்கு – 17 ஆண்டுகளுக்குமுன்னால், அவர் ஆட்சிக்கு வந்தவுடன், இங்கே அமர்ந்திருக்கின்றவர்களில் பலர், நம்முடைய எம்.பி., பழனி மாணிக்கம் போன்றவர்கள் அன்றைக்கு அந்த நிகழ்ச்சியில் அமர்ந்திருந்தார்கள் – ஒரு பெரிய நிகழ்ச்சி – விழாவுக்குப் பின் ஒரு கவிதையையே எழுதினார் கலைஞர் அவர்கள் – அவ்வளவு பெரிய சிறப்பு, மகிழ்ச்சி!

**நூற்றாண்டு விழா என்பது கலைஞர் என்ற ஒரு தனி மனிதருக்கு அல்ல!**

இன்றைக்கும் அதேபோலத்தான் மிகுந்த மகிழ்ச்சியோடு நாம் அனைவரும் இருக்கிறோம். காரணம் என்னவென்றால், நூற்றாண்டு விழா



என்பது கலைஞர் என்ற ஒரு தனி மனிதருக்கு அல்ல.

**ஒரு நீண்ட வரலாறு – திராவிடத்தினுடைய வரலாறு!**

நீதிக்கட்சி – திராவிடர் இயக்கம் – திராவிடர் கழகமாக மாறி, சுயமரியாதை இயக்கம் உள்ளடக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் அமைப்பாக அங்கமாக ஆகி, ஒரு பெரிய வரலாற்றைத் தந்திருக்கிறது.

அண்ணா அவர்கள் 18 ஆண்டுகளுக்குப் பின், தந்தை பெரியார் அவர்களை திருச்சியில் சந்தித்துப் பேசுகின்ற நேரத்தில், உணர்ச்சிப்பூர்வமாக ஒரு வார்த்தை சொன்னார்.

''பெரியாருடைய பணி எப்படிப்பட்டது என்றால், ''Putting Centuries in to a Capsule''' என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

''பல நூற்றாண்டுகளை ஒரு குளிகையில் அடைப்பதைப் போல'' என்றார்.

அதை அப்படியே செய்தவர் – தொடர்ந்தவர் கலைஞர். அதை மிஞ்சியவர் நம்முடைய இன்றைய முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர்.

இவருடைய பணி சாதாரணமான பணியல்ல. நாம் இவரைப் பாராட்டுவது, அவரைப் பெருமைப்படுத்துவது என்பதைவிட, இந்த சமுதாயத்தை உயர்த்துவதற்காக – இந்த சமுதாயம் பயனடைய வேண்டும் என்பதற்காக.

**தமிழ்நாட்டுத் தலைவர் மட்டுமல்ல – அகில இந்தியாவிற்கும் வழிகாட்டக் கூடியவர்!**

ஏனென்றால், தமிழ்நாட்டைத் தாண்டி, திராவிடத்தைத் தாண்டி, இந்தியாவே இப்பொழுது இவரைத்தான் நம்பிக் கொண்டிருக்கின்றது; இவர்களுடைய தலைமையைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. புதிய இந்தியாவை உருவாக்கக் கூடிய அளவிற்கு இன்றைக்கு அவர்கள்தான் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றபொழுது, நம்முடைய தலைவர், தமிழ்நாட்டுத் தலைவர் மட்டுமல்ல – அகில இந்தியாவிற்கும் வழிகாட்டக் கூடியவராக இருக்கின்றார்.

**கலைஞர் வழியை அப்படியே பின்பற்றுகிறார்!**

கலைஞர் இருந்தபொழுது, யு.பி.ஏ. என்கிற அய்க்கிய முற்போக்குக் கூட்டணியை உருவாக்கினார். அந்த வழியிலே, ''தம்மின் தம்மக்கள் அறிவுடைமை'' என்று சொல்லுகின்ற வள்ளுவர் குறள்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சமூகநீதிக்கான சரித்திர நாயகர் அவர்கள் – கலைஞர் வழியை அப்படியே பின்பற்றுகிறார்.

கலைஞர், பெரியார் வழி, அண்ணா வழியைப் பின்பற்றினார். அப்படியே அகலமாகிக் கொண்டே இருக்கிறது ஈரோட்டுப் பாதை. அதனுடைய விழியாக, அகில இந்தியாவிற்கும் இப்பொழுது வழிகாட்டக் கூடிய அளவிற்கு இருக்கிறார். அதனால்தான், எதிரிகள் இவரைக் கண்டு மிரளுகிறார்கள். இன்னும் மிக முக்கியமாக, எங்கே போனாலும், தி.மு.க. தான் நம்முடைய பிரதமர் அவர்களுக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

**பிரதமர் மோடியே ஆடிப் போயிருக்கிறார்!**

அப்படியானால் என்ன அர்த்தம் என்று சொன்னால், அஞ்சா நெஞ்சன் அண்ணன் அழகிரி அவர்கள், இதே மண்ணிலே பிறந்து, இதே மண்ணிலே மறைந்தார். அவருக்கு நினைவுச் சின்னம் இங்கேதான் வைக்கப்பட்டு இருக்கிறது. அவர் சொல்வார்.

''ஈட்டி எட்டிய வரையில் பாயும் –

பணம் பாதாளம் வரையில் பாயும் –

எங்கள் பெரியார் கொள்கைகள் இருக்கிறதே,

அவை அண்ட பிண்ட சராசரங்கள்

அத்தனையிலும் பாய்ந்து – அதற்கு

அப்பாலும் பாயும்!'' என்று சொன்னார்.

இப்பொழுது அதை உணர்கிறோம். அதனால்தான், பிரதமர் ஆடிப் போயிருக்கிறார். கோவில்களையெல்லாம் தி.மு.க. அபகரித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்.

1924–1925 ஆம் ஆண்டு நீதிக்கட்சி சட்டம் போட்டு, இந்தியாவில் முதன்முறையாக அறநிலையப் பாதுகாப்புத் துறை சட்டம் – அதன்படி காணாமல் போன கடவுள்களையும், விசா இல்லாமல் திருப்பிக் கொண்டு வரக்கூடிய ஆட்சியாகத்தான் இந்த ஆட்சி இருக்கிறது என்று சொல்லும்பொழுது, பிரதமருக்கு வரலாறு தெரியவில்லையா? தெரிந்தும் அவருக்குச் சொல்ல மனம் இல்லையா? என்ற சூழ்நிலையே தெரிகிறது.

அன்று யு.பி.ஏ.யை உருவாக்கினார் கலைஞர் – இன்று 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர்!

எனவேதான், இங்கே இருக்கக்கூடிய எங்கள் முதலமைச்சர் – சமூகநீதிக்கான சரித்திர நாயகர் – 'இந்தியாவை' – உருவாக்கினார். கலைஞர் அவர்கள் யு.பி.ஏ.வை உருவாக்கியதைப்போல, இன்றைய நம்முடைய முதலமைச்சர் 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியிருக்கிறார்.

**'இந்தியா'வின் நம்பிக்கையாக இருக்கிறார்!**

'இந்தியா' கூட்டணிதான் நாளைக்கு ஆளப்போகின்ற கூட்டணியாக இருக்கின்றது என்பதற்கு அச்சாரமாக முதலில் அவர் பணியேற்று இருக்கிறார்.

இதுதான் பல பேருக்குக் குத்துகிறது, குடைகிறது, அச்சத்தை ஏற்படுத்துகிறது.

இந்த சூழ்நிலையில், எங்கள் திராவிட ஏவுகணையே, நீங்கள் வாழ்க! உங்களுடைய பணி வளர்க!

உங்களுடைய பணி என்பது தனி நபர்களைத் தாக்காது – தத்துவங்களைத் தாக்கும், தகர்க்கும்!

பாராட்டிப் போற்றி வந்த பழைமைலோகம்

ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்! என்று சொன்னார் முத்தமிழறிஞர் கலைஞர்.

**தாய்க்கழகம் உங்களை உச்சி மோந்து பாசத்தோடு பாராட்டுகிறது. வரவேற்கிறது!**

இடிக்கவேண்டிய பகுதிகள் பாக்கியிருக்கின்றன; அதை நீங்கள் செய்யுங்கள். அதற்குத்தான் தாய்க்கழகம் உங்களை உச்சி மோந்து பாசத்தோடு பாராட்டுகிறது – வரவேற்கிறது.

வாழ்க கலைஞர்!

வாழ்க நம்முடைய தளபதி!

வருக புதிய சமுதாயம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையுரையாற்றினார்.

---

### உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு தலா ரூ.3 இலட்சம் நிதிஉதவி!

## கிருஷ்ணகிரி - அத்திப்பள்ளி பட்டாசு விபத்தில் 13 பேர் பலி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 9– தமிழ்நாடு-கர்நாடக மாநில எல்லையில் இயங்கிவந்த பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு-கர்நாடக எல்லையில், கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளி என்ற இடத்தில் இயங்கிவந்த பட்டாசுக் கடையில் நேற்று முன்தினம் (7-10-2023) ஏற்பட்ட தீவிபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேர் உயிரிழந்தனர் என்ற மிகுந்த வேதனையான செய்தியினைக் கேட்டு துயரமடைந்தேன்.

இச்சம்பவம் குறித்து கேள்விப்பட்டவுடன் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களை விபத்து நடந்த இடத்திற்கு சென்று தேவைப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்க அனுப்பிவைத்துள்ளேன். மேலும், இச்சம்பவம் குறித்து நமது தலைமைச் செயலாளர் கர்நாடக மாநில தலைமைச் செயலாளருடன் பேசியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை மேற்கொள்ளவும், மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களை தமிழ்நாட்டுக் கொண்டுவரவும் உரிய ஏற்பாடுகளை செய்ய மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களையும் அனுப்பிவைத்துள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், கடும் காயமடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## அக்.12ல் நீலகிரி வரையாடு திட்டம் துவக்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.9– நீலகிரி வரையாடு திட்டத்தை வருகிற அக்டோபர் 12 ஆம் தேதி தொடங்கி வைக்க இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு :

இன்று நினைவில்கொள்ளத் தக்கதோர் நாள்!

டாக்டர் ஈ.ஆர்.சி. டேவிதார் அவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக ஒவ்வோராண்டும் அக்டோபர் 7ஆம் நாளினை நீலகிரி வரையாடு நாள் ஆக அர்ப்பணிக்கிறோம். டாக்டர் டேவிதார் தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு குறித்த ஆய்வினை 1975இலேயே முன்னெடுத்த முன்னோடி ஆவார்.

நீலகிரி வரையாடு திட்டத்தையும் வருகிற அக்டோபர் 12 ஆம் நாள் தொடங்கி வைக்க இருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



மதுரை மாநகராட்சி டி.எம்.நகரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய பாலத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் தனராஜ், செங்கிஸ்கான், ராதிகா கவுரிசங்கர் மற்றும் அதிகாரிகள்,பொதுமக்கள் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசு வழங்கினார். இதில் எழுத்தாளர் இமயம், பொறியாளர் அணி கார்த்திகேயன், ஜி.தண்டபாணி , பொ.புகழேந்தி, வி.பக்கிரிசாமி.வீர இராமச்சந்திரன், ஆனந்தி, சுமதிநந்தகோபால், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழா!

# கடலூர் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பேச்சுப்போட்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுகள்,சான்றிதழ்கள் வழங்கினார்!

கடலூர் , அக். 9 -

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி சார்பில் நடத்திய பொறியியல் மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

அரசு மற்றும் தனியார் கல்லூரிகளின் , 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். என்.எல்.சி., தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், துணை அமைப்பாளர்கள் கலைச்செல்வன், பாண்டுரங்கன், ராம் சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி பேச்சுப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் ஊக்கத்தொகை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராசவன்னியன், எழுத்தாளர் இமயம்,நெய்வேலி நகரச் செயலாளர் பக்கிரிசாமி, மாவட்டப் பொருளாளர் தண்டபாணி, தொ.மு.ச. பொதுச்செயலாளர் பாரி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் புகழேந்தி, தொ.மு.ச. தலைவர் திருமாவளவன், பொருளாளர் ஐயப்பன், மாவட்ட துணைச் செயலாளர் ஆனந்தி சரவணன், ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால், தொமுச முன்னாள் தலைவர்கள் வீரராமச்சந்திரன், சிவந்தான் செட்டி, மாவட்ட பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், நாசர், மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், சதாம், முன்னாள் தொ.மு.ச. பொருளாளர் குருநாதன், மேற்கு மாவட்ட தொண்டரணி தலைவர் மணி வண்ணன், துணைத் தலைவர் ஸ்டாலின், மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சக்திவேல், எலவத்தடி பொன்னம்பலம், மாணவரணி ரமேஷ் மற்றும்கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் நிரஞ்சன் நன்றி கூறினார்.

## செம்பரம்பாக்கம் ஏரியில் 100 கனஅடி உபரி நீர் திறப்பு!

சென்னை, அக்.9 -

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து நேற்று காலை 10 மணியளவில் 100 கனஅடி உபரி நீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

உபரிநீர் திறந்துள்ளதால் சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர். திருமுடி வாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் கரையின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

## பண்டிகையை முன்னிட்டு

# ஆவினில் நெய் பால்கோவா கூடுதலாக உற்பத்தி செய்ய ஏற்பாடு!

## பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தகவல்!

மதுரை, அக். 9 -

பண்டிகை காலங்கள் நெருங்கி வருவதையொட்டி ஆவின் மூலம் நெய், பால்கோவா உள்ளிட்ட இனிப்பு வகைகள் கூடுதலாக உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டு துறை சார்பாக தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயல் ஆட்சியர்களுக்கான பயிற்சி வகுப்பு மதுரை ஆவின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட 8 மாவட்ட கூட்டு றவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களைச் சேர்ந்த பணியாளர்கள் பங்கேற்ற பயிற்சியை பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஆவின் நிறுவனத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது, அதன்படி சென்னை மண்டலத்தில் இரண்டு கட்ட பயிற்சி வகுப்புகள் நிறைவு பெற்றுள்ளன, தொடர்ந்து மதுரை மண்டலத்தின் 8 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான பயிற்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனத்தில் நிர்வாக ரீதியாக இருந்த ஒரு சில இடர்பாடுகள் படிப்படியாக தீர்வு காணப்பட்டு வருகிறது.

நாளொன்றிற்கு 26 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில் கடந்த நான்கு மாதங்களில் 30 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளோம், பாலின் தரத்திற்கு ஏற்ப விலையை நடைமுறைப்படுத்தி விவசாயி களுக்கு பால் லிட்டருக்கு ரூபாய் மூன்று முதல் ஐந்து ரூபாய் வரை கூடுதலாக கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பாலின் தரத்தை அறியும் கருவி வழங்கப்பட்டுள்ளது, பால் உற்பத்தியை பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்திடும் வகையில் கறவை மாடுகள் வாங்க, பராமரிக்க, கடன் உதவி, கறவை மாடுகளுக்கு காப்பீடு, பசுந்தீவன புல் வளர்ப்புக்கான விதை வழங்கல், தரத்துடன் பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு பரிசு வழங்கி அவர்களை ஊக்குவிப்பது என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களது ஒட்டு மொத்த உற்பத்தி செலவை கருத்தில் கொண்டு பால் கொள்முதலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையை உயர்த்திட வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர், இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலங்கள் நெருங்கி வருவதை முன்னிட்டு ஆவின் நிறுவனம் சார்பில் நெய், பால்கோவா போன்ற பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனத்தில் தேவைக்கேற்ப மனித ஆற்றலை அதிகரித்து உரிய நேரத்தில் நுகர்வோர்களுக்கு பால் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

ஆவின் பால் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல், கமிஷன் கேட்டல் போன்ற செயல்களில் ஈடுபடுவர்கள் குறித்து ஆதாரத்துடன் புகார் செய்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தரமான பாலுக்கு ஒரு ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் திண்டுக்கல்லில் துவங்கப்படுகிறது, ஆவினில் முறைகேடு செய்பவர்கள் தப்பிக்க முடியாது, முறைகேடுகளை தடுக்க எஸ்பி தலைமையில் லஞ்ச ஒழிப்புத்துறை செயல்பட்டு வருகிறது என தெரிவித்தார்

மேலும் இந்நிகழ்ச்சியில் ஆவின் நிர்வாக இயக்குனர் வினித் மதுரை ஆவின் பொது மேலாளர் சிவகாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் கழக மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என்.மாலைராஜா, துணை மேயர் கே.ஆர்.ராஜ், விஜிலாசதியானந்த், நெல்லை ரவி, கிரிஜாகுமார், அண்ணாதுரை, வில்சன் மணிதுரை, கே.கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன், எல்.மீரான் மைதீன், மிக்கேல், மாயா செந்தில் குமார், குருஜெஸி, அன்பழகன், அருள்மணி, பொன்னையா பாண்டியன், நவநீதன், போத்திகண்ணு, மலைமுத்து, நெல்லைமுருகன் தொப்பி மைதீன், என்.எம்.ஆர்.இசக்கிபாண்டியன், அனிதா, மணிகண்டன், மாரிமுத்து, பிரபா அருள்மணி, காதர் ஒலி, முகமது அலி, ஹனீபா மு.அ.சபிமுகம்மது ஆகியோர் முன்னிலையில் மானூர் மேற்கு ஒன்றியம், உக்கிரகோட்டை ஊராட்சியில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்

### அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

'நம்நாடு' இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தலைமை!

திண்டுக்கல் , அக். 9 -

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் வாக்குசாவடி முகவர்கள் ஆலோசகர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வேடசந்தூர்சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தலைமை வகித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் வேடசந்தூர் தொகுதி பொறுப்பாளர் நாச்சிமுத்து, முன்னிலை வகித்தார். வேடசந்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கவிதா பார்த்திபன் எரியோடு பேரூராட்சி தலைவர் முத்துலட்சுமி, பண்ணை கார்த்திக், எரியோடு பேரூர் செயலாளர் சின்னா என்ற செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத்தில் இளைஞர் அணி உறுப்பினரை அதிக அளவில் சேர்த்தல், இளைஞரணி மாநாட்டு ஏற்பாடுகள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நாடாளுமன்ற தேர்தல் வியூகம், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு நவம்பர் 4,5,14,15 ஆகிய தேதிகளில் வாக்காளர்களை சேர்த்தல் நீக்குதல் சிறப்பு முகாம் அமைத்து அதில் புதிய வாக்காளர்களை அதிகப்படியாக சேர்த்தல், கூட்டுறவு சங்கங்களில் அதிகப்படியான புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் உள்ளிட்டதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட கவுன்சிலர், வார்டு கவுன்சிலர்கள், ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள்,கிளை செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடாளுமன்ற தேர்தல் வரை

## திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிட

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தொடர் பொதுக் கூட்டங்கள்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் - மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் -

தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமைமிகு சாதனையை படைத்து, இரண்டரை ஆண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் வருகிற 21.10.2023, 22.10.2023, 28.10.2023, 29.10.2023 ஆகிய தேதிகளில் சனி, ஞாயிற்று கிழமைகளில் கீழ்க்கண்ட பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்காணும் விவரப்படி தொடர் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.


| நாள் : 21.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி | |
|---|---|
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ. |
| பல்லாவரம் வடக்கு பகுதி | பவானி கண்ணன் |
| காட்டாங்களத்தூர் தெற்கு ஒன்றியம் | களூர் முரளி |
| திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | குத்தாலம் அன்பழகன் |
| செங்கல்பட்டு நகரம் | போடி காமராஜ் |
| திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| திருக்கழுக்குன்றம் பேரூர் | முனைவர் சபாபதி மோகன் |
| **நாள் : 22.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| மாங்காடு நகரம் | ஈரோடு இறைவன் |
| பம்மல் தெற்கு பகுதி | முனைவர் சபாபதி மோகன் |
| திருப்போரூர் பேரூர் | பவானி கண்ணன் |
| திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| பல்லாவரம் தெற்கு பகுதி | போடி காமராஜ் |
| புனிததோமையர் மலை வடக்கு ஒன்றியம் | களூர் முரளி |
| மறைமலை நகர் நகரம் | குத்தாலம் அன்பழகன் |
| **நாள் : 24.10.2023 (புதன்) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| ஆலந்தூர் தெற்கு பகுதி | சைதை சாதிக் |
| **நாள் : 25.10.2023 (வியாழன்) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ. |
| **நாள் : 26.10.2023 (வெள்ளி) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| ஆலந்தூர் வடக்கு பகுதி | ஈரோடு இறைவன் |
| **நாள் : 28.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| குன்றத்தூர் நகரம் | குடியாத்தம் புவியரசி |
| திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | நாகம்மை கருப்பையா |
| பம்மல் வடக்கு பகுதி | ஆரணி மாலா |
| தாம்பரம் கிழக்கு பகுதி | சேலம் சுஜாதா |
| செம்பாக்கம் வடக்கு பகுதி | கந்திலி கரிகாலன் |
| நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம் | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| **நாள் : 29.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| செம்பாக்கம் தெற்கு பகுதி | சேலம் சுஜாதா |
| திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் |
| பெருங்களத்தூர் தெற்கு பகுதி | ஆரணி மாலா |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | சைதை சாதிக் |
| திருப்பெரும்புதூர் பேரூர் | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| மாமல்லபுரம் நகரம் | சேப்பாக்கம் பிரபாகரன் |
| **நாள் : 30.10.2023 (திங்கள்) – நேரம்: மாலை 5 மணி** | |
| **பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்** | **உரையாற்றும் பேச்சாளர்** |
| கண்டோன்மென்ட் நகரம் | குடியாத்தம் புவியரசி |

அறிவிக்கப்பட்டுள்ள இந்த பொதுக்கூட்டங்களை, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, உள்ளூரில் உள்ள கழகப் பேச்சாளர்களையும் இணைத்து, அழைப்பிதழில் கழக நிர்வாகிகளின் பெயர்களை விடுபடாமல் முறையாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு,

அந்தந்த மாநகர பகுதி - ஒன்றிய - நகரங்களில் அடங்கிய நகர - பேரூர் - வட்டக் கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,

எந்த நோக்கத்திற்காக இந்த தொடர் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை - எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக அவர்கள் ஆட்சியின் போது ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்திட, இப்பொதுக்கூட்டங்களை ஆடம்பரமின்றி - மிகவும் எளிமையான முறையில் - எழுச்சியுடன் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், திண்டுக்கல் மாவட்டம், புளியமரத்துக்கோட்டை பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நேற்று முன்தினம் (07.10.2023) ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள பால் குளிரூட்டும் மையத்தை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி உட்பட பலர் உள்ளனர்.

கழக வழக்கறிஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# நெல்லை மண்டல அளவில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

நெல்லை.அக்.9-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் நெல்லை மண்டல அளவிலான மாணவர்,மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி நெல்லை அரசு சட்டக் கல்லூரியில் வைத்து கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை இணை செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா, மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் ஜெ.செல்வசூடாமணி எம். காமினிதேவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ் ரவிச்சந்திரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு நடுவராக தலைமை கழக வழக்கறிஞர் சூரிய வெற்றி கொண்டான்,நெடுமாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் கழக சட்டத் துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. பேசியதாவது.

கலைஞரின் சாதனைகளைப் பற்றி நீங்கள் பேசுவதை கேட்பதற்கு நாங்கள் வந்துள்ளோம்.இதனை அரசியல் கட்சி நிகழ்வாக பார்க்க வேண்டாம்.கலைஞர் அவர்கள் சமூக நீதி,மகளிர் உரிமை, கல்வியில் முன்னேற்றம்,போன்ற எந்த எந்த துறையில் முன்னேற்றத்தை எடுத்துச் சென்றுள்ளார்களோ, அதன் அடிப்படையில் தான் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.இங்கு மகளிர் அதிக அளவு வந்துள்ளீர்கள், அதற்கு காரணம் கலைஞர் தான்.தமிழகத்தின் வளர்ச்சியில் எந்த பரிமாணமானங் களை பார்த்தாலும் கலைஞரின் பங்கு உண்டு.கலைஞரின் முழு உழைப்பு எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் இது நடக்கிறது.

ஜனநாயக நாட்டில் எந்த ஒரு கொள்கையை வேண்டுமானாலும் உங்கள் மனதில் பட்டதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது குறித்து விளக்க வேண்டியது எங்களுடைய கடமை. திராவிட சித்தாந்தங்களும் திராவிட மாடலும் இந்தியாவிற்கு வழிகாட்டியாக உள்ளது.தமிழகத்தில் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கிறது அதுவே திராவிட கொள்கை."திராவிட மாடல் ஆட்சி"ஆகும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி,சட்டக் கல்லூரி உருவாக்கித் தந்தவர் கலைஞர். அப்படிப்பட்ட கலைஞரின் சாதனைகளை நீங்கள் பேச வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் போட்டிகளை நடத்திட உத்தரவிட்டு உங்கள் பேச்சுக்களை கேட்க மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

மண்டல அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறுவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 50,000,2வது பரிசு 25 000,ம் 3வது பரிசு 15000,ம் 2 ஆறுதல் பரிசு ரூபாய் 5000,ம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் 6ம் தேதி ஒரு எழுச்சி மிகுந்த மாநாடு சென்னையில் நடைபெற்ற உள்ளது. அன்று போட்டிகளுக்கான இறுதி சுற்று நடைபெறுகிறது.

இவ்வாறு கழக சட்டத் துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி.பேசினார்.

இந்தப் போட்டியில் நெல்லை அரசு சட்டக் கல்லூரி,வாசுதேவநல்லூர் தங்கப்பழம் கல்லூரி,தூத்துக்குடி கல்லூரி சேர்ந்த மாணவர், மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**போட்டிக்கான தலைப்புகள்:**

கலைஞரின் பார்வையில் சமூக நீதி.

கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி.

கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்.

கலைஞரின் பார்வையில் தொழில் வளம்.

கலைஞரின் பார்வையில் கல்வி.

ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற பேச்சு போட்டியில் மாணவ,மாணவிகள் உட்பட 44 பேர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜா முகம்மது,தென்காசி வடக்கு மாவட்ட அமைப்பாளர் பிச்சையா, துணை அமைப்பாளர்கள் தவசிராஜன்,விஜயகுமார்,கார்த்திக் தம்பிரான், அருள் ராஜா,மணிகண்டன்,பரமசிவன் மற்றும் ஹரிபாலகிருஷ்ணன், கந்தசாமி உள்பட கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கூரை அமைப்பதற்கான இடத்தினை பார்வையிட்டு செய்தித்துறை மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், முருகவேல், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் சுப.த.திவாகரன், மக்கள் செய்தி துறை இயக்குனர் த.மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மா.கிரகாம்பெல் தலைமை! ஜான் கென்னடி வரவேற்புரை!

# திசையன்விளையில் கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் - நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

நெல்லை.அக்.9-

நெல்லை கிழக்கு மாவட்ட திமுக திசையன்விளையில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் திசையன்விளை நேரு திடலில் மாவட்ட அவை தலைவர் மா.கிரகாம்பெல் தலைமையில் ஒன்றிய அவை தலைவர் முத்துராமலிங்கம்,நகர அவை தலைவர் ரெங்கசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நகர செயலாளர் ஜான் கென்னடி வரவேற்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் பா.சம்பத் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினர்.

நிகழ்வில் நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, மதிமுக மாவட்ட செயலாளர் உவரிரைமண்ட், பொதுநல பேராளி ரகுமான், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முருகன்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அல்பின் அன்றனி பிரேமா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ். என்.முருகன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரேம்ஆனந்த், ராதாபுரம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் வீனஸ்வீர அரசு, தனபால்,பேரூர் கழக நிர்வாகிகள் ரவிக்குமார், சுதர்சன், சுகந்திஜேசன், கனிஷ்கர், பரமசிவன், சௌந்தர், ஒன்றிய பிரதிநிதிகள் சீனிவாசன், வசந்தகுமார், அணி துணை அமைப்பாளர்கள் சுவிகர், ஐஸ்வர்யா, பிரபு, நஸ்ருதீன், ஆண்ரூஸ் ஜேசன், குட்டம் கண்ணன், பன்னீர் செல்வம், சத்திய பாலன், ஞானராஜ், சுரேஷ், சரோஜா முத்துதுரை,

லிங்க தமிழரசன்,பரிமளம்,பலவேசம், ஜான்சன்,நவநீதகிருஷ்ணன், கமலா நேரு, ஜெனிபர், கோபிகோபால கண்ணன், சுரேஷ் பாக்கியம், சிவானந்த பெருமாள் என்ற சிவா,முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் ஜெயராஜ்,கலைஞர் மின்னொளிப்படை மார்ட்டின், ஈகிள் ராஜா, கிறிஸ்டோபர் ராபின், பேரூர் அணி அமைப்பாளர்கள் ஆசிக்முகமது, சுரேஷ், கனி, அசன்அலி, ரியாத்தான், பேச்சிமுத்து சக்திவேல், ராஜா, மகளிர் அணி பிரேமா ஜெயபால், சுயம்புராஜ், வீரமணி, தங்கவேல், கிறிஸ்டோபர்,

சுந்தர்ராஜன்,கழக வழக்கறிஞர் கார்த்திக் ராஜா,நல்லாசிரியர் திரவியம் பொன்ராஜ், கழக முன்னோடிகள் பிரகாசம், பரமசிவன், ஜெயராஜ் உள்பட கழக தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 5வது வார்டு செயலாளர் அருண்குமார் நன்றி உரையாற்றினார்.

அமைச்சர் ஆர்.காந்தியின் உறவினர்

# பெங்களூர் சந்திரசேகர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் - அமைச்சர் காந்திக்கு ஆறுதல் - இரங்கல்!

சென்னை,அக்.9-

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சரும் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளருமான ஆர்.காந்தி அவர்களது உறவினரான பெங்களூர் சந்திரசேகர் அவர்கள் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து கழக தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி வாயிலாக காந்தி அவர்களைத் தொடர்புகொண்டு தமது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார்.

## தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

## 34வது ஆண்டு நினைவு வணக்கம்

தோற்றம்
14.11.1922



மறைவு
9.10.1989

*என்றும் தங்கள் வழி நடக்கும்*

**டி.கே.எஸ்.இளங்கோவன்**, Ex. M.P., (செய்தி தொடர்பு செயலாளர், தி.மு.க.) — **நளினி**

**டி.கே.எஸ்.மணிவண்ணன்** — **குணபூஷணி**

**டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி** — **எஸ்.தமிழ்மணி**

**திருமதி கீதாலட்சுமி வில்லாளன்**

**திருமதி. மாதவி – ஜான் விஜய்,**

**திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,**

**சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,**

சிவகங்கை மாவட்டம்: திருபுவனத்தில்

# திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - கீதாஜீவன் தொடங்கி வைத்து சிறப்புரை!

சிவகங்கை.அக். 9-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவரும் முதல் வருமான மு .க .ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி மாநில மகளிர் தொண்டரணி சார்பில் ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த தலைவர் கலைஞர் என்னும் தலைப்பில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் பங்கு பெறும் மதுரை மண்டல அளவிலான மாபெரும் முதல் கருத்தரங்கம்திருப்புவனத்தில் நடைபெற்றது.

மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளருமான திருமதி தமிழரசி ரவிக்குமார் தலைமையில் முன்னாள் அமைச்சர் மூ. தென்னவன், மாநில மகளிரணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி நாமக்கல் ராணி, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் திருமதி விஜிலாசத்தி யானந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவரும் மாவட்ட துணை செயலாளருமான த.சேங்கைமாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில தவழும் மாற்றுத்திறனாளிகள் சங்க பொதுச் செயலாளர் மதுரை சொக்கன் ராஜா வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கில் கலைஞரும் அவரைத் தொடர்ந்து முதல்வர் தளபதி செய்த சாதனைகளை பட்டியலிட்டு திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர் பிரியா பாபு, டிசம்பர் 3 இயக்க மாநில தலைவர் லயோலா கல்லூரி கல்லூரி பேராசிரியரும் மாற்றுத்திறன் நல வாரிய உறுப்பினர் பேராசிரியர் டி. எம். என். தீபக், மாநில தவழும் மாற்று திறனாளிகள் சங்க மாநில தலைவரும் , மாநில மாற்றுத்திறனாளிகள் வாரிய உறுப்பினருமான கே. டி .ஜி. புஷ்பராஜ் ஆகியோர் பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் பேசியதாவது.

கலைஞர் முதல்வராக இருந்த பொழுது மாற்றுத்திறனாளிகளுக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தினார் மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்க உத்திரவிட்டார். பேருந்தில் பயணம் செய்தால் உடன் செல்பவர்களுக்கும் கால் டிக்கெட், என்று அறிவித்தார் . தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு 19 உத்தரவினை பிறப்பித்து அதை நிறைவேற்றி னார். ரயிலில் ரிசர்வ்செய்து செல்லலாம் என்றுஇருந்ததை மாற்றி இந்தியாவில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகள் தனிபெட்டியில் ரயிலில் செல்ல வழி ஏற்படுத்தி தந்தார். திருநங்கைகள் என்று அழகான பெயர் சூட்டி மகிழ்ந்தார். தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வரும் மாற்றுத்திறனாளிகள் உதவி தொகை அதிகரிப்பு, நலத்திட்ட உதவிகள் இருமடங்கு. உயர்வு, திருநங்கைகள் 5பேர் இருந்தால் சுய மகளீர் உதவி குழுக்கள் துவங்கலாம் என்று உத்திரவினை கலைஞர் பிறப்பித்தார்.தொழில் துவங்க ருபாய் 50ஆயிரம் கடனுதவி வழங்கவும் வழி வகை செய்துள்ளார் . கலைஞர் ஆட்சியில் ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் தங்களது வாழ்வில் முன்னேற்றம் அடைந்தார்கள். அவர்கள் முன்னேற்றம் அடைவது போல் திருநங்கை. களும் மாற்றுத்திறனாளிலும் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் விரும்பி மாற்றுத்திறனாளிகள் துறையினை தன்வசம் வைத்திருந்தார். முதல்வர் தளபதி அவர்களும் தலைவர் கலைஞர் வழியில் மாற்று திறனாளிகள் துறையை தன்வசம் வைத்துள்ளார். தலைவர் கலைஞர் அவர்கள்வழியில் தளபதி அவர்கள் உங்களது வாழ்வில் பல நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று விரும்பி செயல்பட்டு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவித்து வருகிறார். எனவே இத்தகைய சாதனை களை செய்த கலைஞர் அவர்களை நூற்றாண்டு விழாவில் அவரை நாம் நினைத்துப் பார்ப்பது நமக்கு பெருமையாக இருக்கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு அங்கீகாரம் தந்த தலைவர் கலைஞர் வழியில் அயராது பணியாற்றி வரும் தளபதி அவர்கள் கரத்தினை வலுப்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது அரசுத்துறைகளில் பல்வேறு சாதனைகள் படைத்திருந்தார். அதில் மாற்றுத்திறனாளிகள் திருநங்கைகளுக்கு பெயர் சூட்டி அழகு பார்த்து மகிழ்ந்தார். பல்வேறு உதவிகளையும் செய்து வந்தார். தன் வசம் இந்த துறையினை வைத்து உங்களுக்கு நேரடியாக பல்வேறு உதவிகளை செய்து வந்தார். தலைவர் கலைஞர் செய்ததை விட அதை மிஞ்சும் வகையில் கூடுதலாக முதல்வர் தளபதி அவர்கள் தற்பொழுது பல்வேறு திட்டங்களை மாற்றுத்திறனாளிக்கும் திருநங்கைகளுக்கும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார் .உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டிருந்தாலும் உங்களது உள்ளத்தில் பாதிப்பு இல்லை. தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் எத்தகைய திட்டங்களை உங்களுக்கு செயல்படுத்துகிறாரோ அவரது வழியில் நாங்கள் அன்புடன் உங்களை அரவணைத்து திட்டங்கள் நிறைவேற்றி உங்களது வாழ்வில் ஒளி ஏற்றுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் 550 மாற்றுத்திறனாளிகள் 50 திருநங்கைகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை அமைச்சர்கள் கே ஆர். பெரிய கருப்பன் திருமதி கீதா ஜீவன், தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள். திருநங்கை மதுரை சோனு நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், ஒன்றிய செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்பசாமி, துரை.ராஜா மணி, வே.தமிழ்மாறன், மானாமதுரை நகர கழக செயலாளர் க.பொன்னுசாமி, பேரூர்கழகச் செயலாளர் நாகூர் கனி,மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில்,மகளிரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட் கமலா, பாக்கியலட்சுமி ,சண்முகப்ரியா,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதிராஜ்குமார், மாவட்ட வர்த்தக அணிதலைவர் ருக்மா சரவணன், திருபுவனம் ஒன்றிய குழு துணைத் தலைவர் மூர்த்தி, பேரூராட்சி மன்ற துணைதலைவர் ரஹ்மத்துல்லா நிர்வாகிகள் அண்ணாமலை மகேந்திரன், சேகர் ஈஸ்வரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் தொண்டர் அணி இணைசெயலாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. திருப்புவனம் பேரூராட்சி தலைவர் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் மற்றும் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா கபடா ராஜி (கே. ராஜி)**

**அக்டோபர் 9 (2008)**



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!



வேலைவாய்ப்புகளை உருவாக்காமல் சிறுபான்மையினர் மீது வன்முறைகளை கட்டவிழ்ப்பதில் மட்டும் கவனம் செலுத்தினால் இலங்கை நிலைதான் இந்தியாவிற்கும்.

முன்னாள் ஆர்.பி.ஐ. கவர்னர் திரு.ரகுராம் ராஜன்

அனைத்து மாநிலங்களும் இணைந்து உருவாக்கப்பட்ட தேசம் தான் இந்தியா. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு எதிராக பேசுபவர்கள் தேச விரோதிகள்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்


திருவொற்றியூர் 9வது வட்டச் செயலாளர்

# எம்.எல்.சரவணன் - உமா சரவணன் எம்.சி. மகள் கீர்த்தனா மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 9 –

திருவொற்றியூர் 9வது வட்டச் செயலாளர் எம்.எல்.சரவணன், உமா சரவணன் எம்.சி. ஆகியோரின் மகள் கீர்த்தனா நேற்று (08.10.2023) மறைவெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 9ஆவது வட்டத்தைச் சேர்ந்த வட்டக் கழகச் செயலாளர் M.L. சரவணன் பெருநகரச் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் (9ஆவது வார்டு) திருமதி. உமா சரவணன் ஆகியோரின் அன்பு மகள் S. கீர்த்தனா அவர்கள் இன்று (08.10.2023) அதிகாலை மரணமடைந்தார் என்றறிந்து வேதனையுற்றேன்.

பாசத்துடன் போற்றி வளர்த்த தங்கள் மகளை இளம் வயதிலேயே இழந்து தவிக்கும் பெற்றோர் இருவருக்கும் திருவொற்றியூர் பகுதிக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திண்டுக்கல்லில்

# போக்குவரத்துப் பணியாளர்கள் பேரணி!

திண்டுக்கல், அக். 9 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை லிமிட்) திண்டுக்கல் மண்டலம் சார்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் விழிப்புணர்வு வாரம் 5.10.2023 முதல் 18.10.2023 வரை கடைப்பிடிக்க இருப்பதால் போக்குவரத்து பணியாளர்கள் பங்கேற்ற பேரணி மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் தொடங்கி நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து பேருந்து நிலையத்தில் முடிவுற்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு பிரசுரங்கள் பொதுமக்களிடம் விநியோகம் செய்யப்பட்டது.

பொது மேலாளர் டேனியல் சாலமன் மற்றும் போ.வ.கழக அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.கே. சீனிவாசன்
## அக்டோபர் 9 (1989)



கழகத் தோழர்களால் 'தத்துவ மேதை' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.

1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.

1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டம் ஒன்றிய ,நகர பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் ஆகிய பொறுப்புகளுக்கான நேர்காணல் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் ஆகியோர் தலைமையில் இளைஞர் அணி மாநிலத் துணை செயலாளர்கள் சீனிவாசன். ஜோயல், இன்பா ஏ என் ரகு, இளையராஜா , அப்துல் மாலிக், பிரகாஷ், பிரபு, பிரதீப்ராஜா, ஆனந்த்குமார் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி வன்னியர் குல மண்டபத்தில் நடைபெற்றது இந்த நிகழ்வில் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், ஆர் சிவகுரு மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர். அசோக்குமார். பி. என்.சி.மகேஷ்குமார், கலைச்செல்வன், செல்வராஜ், இராஜகோபால், கார்த்திக், முத்தமிழன், ஹரி பிரசாத்,கோடீஸ்வரன், தங்கசெழியன், நாசர் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இளைஞர் அணி நேர்காணல் - மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, அக். 9-

கிருஷ்ணகிரியில் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டத்தின் ஒன்றிய , நகர , பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணலில் 600 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட ஒன்றிய , நகர ,பேரூர் இளைஞர் பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது பின் நேர்காணல் நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் , மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் 600க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர் அவர்களிடம் கழக மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜோயல் இன்பாரகு இளையராஜா அப்துல் மாலிக் பிரகாஷ் பிரபு சீனிவாசன் பிரதீப் ராஜா ஆனந்தகுமார் ஆகியோர் பங்கேற்று கலந்து கொண்ட இளைஞர்களிடம் நேர்காணலை நடத்தினார்கள் மேலும் இதுகுறித்து அவர்கள் கூறும் போது நேர்காணலில் கலந்து கொண்டவர்களிடம் கட்சி பணிகள் குறித்தும் கல்வி தகுதி குறித்தும் கேட்டுள்ளோம் தகுதி அடிப்படையில் ஒன்றிய , நகர , பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படும் என தெரிவித்தனர்.

முன்னதாக கிருஷ்ணகிரியில் இளைஞரணி சார்பில் திறக்கப்ப ட்டுள்ள கலைஞர் நூலகத்தை இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் பார்வையிட்டனர் .

இந்த நேர்காணல் நிகழ்ச்சிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன் , சுமன் மற்றும் துணை அமைப்பாளர்கள் மகேந்திரன் ,சரவணன், சங்கர் , லயோலா ராஜசேகர் ,சத்தியமூர்த்தி ,கிருஷ்ணன் நரசிம்மன் பிரபாகரன் (எ) ராஜா , தனு குமார் நாகப்பன், முஜமில் பாஷா ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

## திருவொற்றியூரில் மாணவர்களுக்கு சைக்கிள் வழங்குதல்!

சென்னை, அக். 9–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன்மற்றும்விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படிதிருவொற்றியூர்தொகுதியில் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் வரவேற்பில், பள்ளி தலைமையாசிரியர் திருமதி வெற்றிச்செல்வி முன்னிலையில்175மாணவர்களுக்கும்,99மாணவிகளுக்கும் தமிழக அரசின் விலையில்லாமிதிவண்டியைதிருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணித் துணை தலைவருமான கே.பி.சங்கர் வழங்கினார். இந்நிகழ்வில்கழகப்பொதுக்குழுஉறுப்பினரும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி.ராமநாதன், பெற்றோர் ஆசிரியர் சங்க பொருளாளர் ஆர். விவேகானந்தன், பள்ளி உதவி தலைமை ஆசிரியர் கே.பாலாஜி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், வட்டச் செயலாளர் ஆர்.சந்தர், இ.ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், கே.கார்த்திகேயன், கே. சந்தோஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


# பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

## சேப்பாக்கம் க.சந்தானகிருஷ்ணன்

( முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் வட்ட கழக செயலாளர் )

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...

தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்...

மகன்கள் : ச.அம்மையப்பன் ச.ராஜேந்திரன் ச.கலைச்செல்வன் ச.மதிவாணன் ச.கரிகாலன்

மகள், மருமகன் : ச.ரதி க.ராஜசேகர்

மருமகள்கள் புவனேஸ்வரி அம்மையப்பன் புவனேஸ்வரி ராஜேந்திரன் தனலட்சுமி கலைச்செல்வன் சுதா மதிவாணன் ஷர்மிளா கரிகாலன்

பெயரன்கள் கலாநிதி ராஜா அம்மையப்பன் நிரஞ்சன் ராஜசேகர் அஷ்வின் ராஜேந்திரன் ராகவ் ராதாகிருஷ்ணன் கரிகாலன்

பெயர்த்திகள் ஷாலினி அம்மையப்பன் காவ்யா மதிவாணன் அக்ஷயா மதிவாணன்

ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை



# 31 ஆம் ஆண்டு நினைவு தினம்

முன்னாள் ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட

## தி.மு.க.அவைத்தலைவர்



## திரு.R.கோபால்சாமி

அவர்களின் நினைவுகளுடன் வணங்குகிறோம்...

திரு. கோ.தளபதி MLA.

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி

செயலாளர் ~ மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

மற்றும் குடும்பத்தினர்கள், திருப்பரங்குன்றம்,மதுரை.

MR Graphics , mdu - 9965567373

# திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்






பேரறிஞர் அண்ணா மற்றும்
முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன்
தோளோடு தோள் நின்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தின்
முன்னோடித்தலைவர் மற்றும்
கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்,

ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்ட தி.மு.க.வின்
15 ஆண்டு கால முன்னாள் மாவட்டச்செயலாளர்,

திருவண்ணாமலை தொகுதியின்
10 ஆண்டுகால (1957–1967)
பாராளுமன்ற உறுப்பினர்,

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை
இணையத்தின் முன்னாள் பெருந்தலைவர்,

வடஆற்காடு விற்பனைக்குழுவின்
10ஆண்டு கால (1968–1978) தலைவர்,

திருவண்ணாமலை நகர மன்றத்தின்
5ஆண்டு கால(1970–1975) தலைவர்

*திருவண்ணாமலை*

## நினைவில்வாழும் இரா.தர்மலிங்கம் Ex.MP

## அவர்களின் நூற்றாண்டு விழா நடத்தி கௌரவித்து சிறப்பித்த

*தலைமை :*

**மாண்புமிகு எ.வ.வேலு**
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்

*முன்னிலை :*

**கு.பிச்சாண்டி** — சட்டப் பேரவைத் துணைத்தலைவர்
**எம்.எஸ்.தரணிவேந்தன்** — திருவண்ணாமலை (வ) மாவட்டச் செயலாளர்

*வரவேற்புரை :*

**இரா.ஸ்ரீதரன்**
தலைமை செயற்குழு உறுப்பினர்

*விழா சிறப்புரை :*

மாண்புமிகு மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்
நயவுரை நம்பி – திராவிட ஆழ்வார்

**முனைவர் சா.ஜெகத்ரட்சகன்**

**த.வேணுகோபால்** Ex.MP — மாவட்ட அவைத்தலைவர்
மருத்துவர் **எ.வ.வே.கம்பன்** — மாநில தடகள சங்க துணைத்தலைவர்
**சி.என்.அண்ணாதுரை** MP **மு.பெ.கிரி** MLA
**பெ.சு.தி.சரவணன்** MLA **எஸ்.அம்பேத்குமார்** MLA
**ஒ.ஜோதி** MLA

*நன்றியுரை :* **ப.கார்த்திக்வேல்மாறன்** நகரச் செயலாளர்

*விழாக் குழுவினர்கள்*

**எஸ்.பன்னீர்செல்வம்** (முன்னாள் கூட்டுறவு சங்கத்தலைவர்) **ப.விஜயரங்கன்** (மாவட்ட து.செயலாளர்) **எம்.இ.ஜமாலுதீன்** **வி.தனுசு** **ப.இந்திரராஜன்** **எஸ்.ரவிச்சந்திரன்**

மற்றும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எங்கள் குடும்பத்தினர்கள் சார்பில்

## நெஞ்சம் நிறைந்த நன்றி.. நன்றி.. நன்றி..

(நினைவில் வாழும்) **Dr.இரா.த.மதியழகன்**
அன்னை கிளினிக், வேட்டவலம்

(நினைவில் வாழும்) **Er.இரா.த.அன்பழகன்**
தலைமை பொறியாளர்
பொதுப்பணித்துறை (நீர்வளத்துறை) – ஓய்வு

(நினைவில் வாழும்) **இரா.த.சம்பத்**
தலைமை பொதுக்குழு உறுப்பினர் / திருவண்ணாமலை மாவட்ட
வேளாண்மை விற்பனைக்குழு முன்னாள் தலைவர்

*மருமகள்கள் :* **விஜயா அன்பழகன்** சென்னை **கல்பனா சம்பத்** திருவண்ணாமலை

*மகள்கள் :* **திலகவதி தண்டபாணி** சென்னை **செல்வி அருணகிரி** சென்னை **மீனா விநாயகம்** திருவண்ணாமலை **தேன்மொழி புகழேந்தி** சென்னை

*பேரன்கள், பேத்திகள் :* **செந்தில்குமார் மதியழகன்** B.Tech.,M.Tech., – கடலூர் **மதிவாணன் (எ) பிரதீப் அன்பழகன்** B.E.,M.S.,M.B.A.,– சென்னை
**கிருபாசங்கர் சம்பத்** B.E.,M.S.,– USA **தினேஷ் சம்பத்** B.E.,M.B.A.,– திருவண்ணாமலை **சுரேஷ்குமார் தண்டபாணி** B.E.,M.Sc.,– சென்னை **சந்தோஷ் அருணகிரி** B.E.,M.B.A.,– USA
**சதீஷ் விநாயகம்** B.E.,– MUSCAT **வினோத் விநாயகம்** B.C.A.,M.B.A.,– South Africa **ஜோகேஷ் புகழேந்தி** B.E.,M.S.,– USA **ப்ரியா அன்பழகன்** B.Arch– சென்னை
**சுனிதாதேவி தண்டபாணி** B.CS– சென்னை **கவிதா அருணகிரி** B.Sc– சென்னை **சங்கீதா அருணகிரி** B.E.,M.S.,– USA **விலாசினி புகழேந்தி** B.E.,– Australia

**எங்களின் முன்னோர்கள் வகுத்த பாதையில் கழகக் கொள்கை பிடிப்புடன் கழகத்தலைவர் அவர்களது வழியில்
எங்களது தலைமுறைகள் என்றென்றும் பாதை மாறா பயணத்தை தொடருவோம்..**

JAGAN ADS - 9962969675

# திராவிட மாடல் அரசு 38

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## இது நம்ம கோயில் கல்யாணம்!

**‘திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படு கின்றன’** என்பார்கள். அவை பூமியில் நிச்சயிக்கப் பட்டாலும்கூட, பணம் படைத்தவர்களால் நடத்தப்படும் திருமணங்களின்போது சொர்க்கமே பூமிக்கு வந்துவிட்டதோ என்று எண்ணும் அளவுக்கு எங்கு திரும்பினாலும் ஆடம்பரம் கண் கூச வைக்கும்.

அதுபோன்ற செலவீனங்களைக் குறைத்து, எளிமையான முறையில் திருமண நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் சுயமரியாதைத் திருமணங்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் தரப்பட்டது.

என்றாலும், ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து வருகிற மரபார்ந்த நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றுவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். அதுவரை, அந்த மரபார்ந்த விஷயங்களையும் உள்ளடக்கிச் செல்வதே **‘திராவிட மாடல் அரசு’** செல்லும் தடம்.

கூலி வேலை செய்கின்ற, அன்றாடம் வாழ்க்கைப் பாட்டுக்குப் போராடுகிற மக்களுக்குத் தங்கள் குடும்பங்களில் நடைபெறுகிற திருமணங்களை மண்டபங்களில் வைத்துக்கொள்ள வசதி இருக்காது. அவர்களுக்குக் கண்கண்ட சொர்க்கம், மண்டபம் என்பதெல்லாம் கோயில்கள்தான். அந்தக் கோயில்களில் நடைபெறும் வறியவர்களின் திருமணங்களை உற்றாரும் உலகத்தாரும் போற்றும்படி, தங்கத்தில் திருமாங்கல்யம், கட்டில், பீரோ போன்றவை எல்லாம் வழங்கி, அவர்களின் மாண்பை உயர்த்துவதுதான் ‘திராவிட மாடல் அரசு’ அறிவித்துள்ள ‘திருக்கோயில்களில் திரு மணம்’ எனும் திட்டம்.

### தி.மு.க.வும் திருக்கோயில் திருமண மண்டபங்களும்

1967-இல் நமது கழகம் தேர்தலில் நின்றபோது, “தி.மு.க. வெற்றி பெற்றால், தேவாலயங்கள் இடிக்கப்படும்! தேர்த் திருவிழா நின்றுவிடும்! தெப்போற்சவம் தடுக்கப்படும்! மதவாதிகள் மனம் புண்படுத்தப்படும்! ஆண்டவன் திரு உலா இருக்காது! ஆறுகால பூஜை நடக்காது! ஆடிக்கிருத்திகை இல்லை! ஆனித் திருமஞ்சனம் இல்லை! மாசி மகமில்லை! பங்குனி உத்திரமில்லை! கார்த்திகை தீபமில்லை! கருமாரியம்மன் விழா இல்லை!” என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் எழுதின, பேசின.

அப்படிப் பேசிய எதிர்க்கட்சி ஆட்சியிலிருந்த போது 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் கட்டப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை வெறும் 34 மட்டும்தான். ஆனால், 1967-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு வரை கழகம் ஆட்சியில் இருந்தபோது கோயில்களில் ஏற்படுத்தப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 213 ஆகும்.

இவ்வாறு, கொள்கையில் உறுதிப்பாட்டோடு இருந்தாலும், மக்களின் நம்பிக்கைகள் என்று வரும்போது, அதற்கேற்றபடி தன்னை நெகிழ்த்திக் கொள்வதும் கழகம் கடைப்பிடிக்கும் நெறிகளில் ஒன்று. முத்தமிழறிஞர் கலைஞரின் காலத்தில் கோயில் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை அதிகரித்ததைப் போலவே, அங்கு நடைபெறும் இலவசத் திருமணங்களுக்கான நிதி உதவியை 1996-2000 காலகட்டத்தில், ரூ.1,500 என்பதிலிருந்து ரூ.3,000 என்று உயர்த்தியவரும் கலைஞர்தான்.

### ரூ.50 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசை

முத்தமிழறிஞர் கலைஞரின் நெகிழ்வுத்தன்மையை நம் கழகத் தலைவர் முதலமைச்சரும் பின்பற்றுவதன் வெளிப்பாடே, பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்குக் கோயில்களில் நடத்திவைக்கப்படும் திருமணங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியை ரூ.20 ஆயிரம் என்பதிலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறது நம் ‘திராவிட மாடல் அரசு’.

2023-2024 ஆம் ஆண்டு சட்டப் பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், “பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி, திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு, திருக்கோயில் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்துக்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாகத் திருமண விழா நடத்தி வைக்கப்படும்” என்று அறிவித்தார்.

### 4 மாதத்தில் 400+ திருமணங்கள்

இந்தச் சட்டமன்ற அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக, முதற்கட்டமாக சென்னை-1 மற்றும் சென்னை-2 ஆகிய இரண்டு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உட்பட்ட 34 தகுதி வாய்ந்த ஏழை எளிய இணைகளுக்கு மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில், 2023 ஜூலை 7 அன்று, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. அதே நாளில் மாநிலம் முழுவதும் மொத்தம் 222 இணைகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 19- அன்று நீர்வளத்துறை அமைச்சர் முன்னிலையில் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பாக, 20 இணைகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் நடத்தப்படும் திருமணங்களுக்கான நிதியை உயர்த்துவது தொடர்பாக, 2023-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அரசாணை வெளியானது. தொடர்ந்து, இப்போது வரை 477 இணைகளுக்குத் திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

### அறம் செய்யும் அரசு!

மயிலாப்பூர் கோயிலில் நடைபெற்ற திருமணங்களை முன்னிலை வகித்து நடத்தி வைத்த நமது முதலமைச்சர் அவர்கள் தனது உரையில், “மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். அதேநேரத்தில் நம்முடைய மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், தமிழ் உணர்வை அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டுங்கள். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், ‘வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்’ இருந்து நீங்கள் பாடுபடுங்கள், பணியாற்றுங்கள், உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்” என்று வாழ்த்தினார்.

அவர் மேலும் ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொன்னார். “மறைந்த பெரியவர் - தவத்திரு குன்றக்குடி அடிகளார் **‘கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்’** என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில்தான் 34 இணையருக்கு திருக்கோயில்கள் சார்பில், திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படு கின்றன. **இந்தத் துறைக்கு இந்து சமயத் துறை என்று பெயரல்ல, இந்து சமய அறநிலையத் துறை என்று பெயர்.** அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற அறப்பணிகளைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்”.

**ஆம்... திராவிட மாடல் அரசு என்பது அறம் செய்ய விரும்பும் அரசு அல்ல... அறம் செய்கிற அரசு. அதை ‘தமிழ்நாட்டுக் கோயில்களை மாநில அரசு ஆக்கிரமிப்பு’ என்றும் பிதற்றுபவர்கள் விரைவில் உணர்ந்துகொள்ளும் காலம் வரும்..!**

**...சாதனை தொடரும்**

### இது ‘தாயுமானவர்’ அரசின் சீதனம்...

| | |
|---|---|
| 1) திருமாங்கல்யம் 4 கிராம் தங்கம் சந்தை விலைக்கு ஏற்ப... | |
| 2) மணமகன் ஆடை | ரூ.1,000 |
| 3) மணமகள் ஆடை | ரூ.2,000 |
| 4) திருமணத்துக்கு மணமக்கள் வீட்டார் 20 பேருக்கு உணவு | ரூ.2,000 |
| 5) மாலை, பூக்கள் | ரூ.1,000 |
| 6) பீரோ | ரூ.17,800 |
| 7) கட்டில் | ரூ.17,500 |
| 8) மெத்தை | ரூ.2,200 |
| 9) தலையணை | ரூ.2,190 |
| 10) பாய் | ரூ.1,180 |
| 11) கைக்கடிகாரம்-2 | ரூ.1,000 |
| 12) மிக்ஸி 1 | ரூ.1,490 |
| 13) பூஜைப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் வகையறா | ரூ.3,640 |

மொத்தம் ரூ.30 ஆயிரம் + 4 கிராம் தங்கத்துக்கான சந்தை விலை என ரூ.50 ஆயிரம் நிதி உதவி

## அடுத்தத் தாக்குதல் ‘பாரி’ மீதா?

‘**சீ**னாவின் கையாள்’ என்று **‘நியூஸ்கிளிக்’** இணைய இதழ் பற்றி, ஒரு பொய்ச் செய்தியின் அடிப்படையில், சர்வதேச அளவில் பிரபலமான ‘நியூயார்க் டைம்ஸ்’ இதழ் எழுதப் போக, அந்த இதழைச் சார்ந்த பத்திரிகையாளர்களைக் கைது செய்தது ஒன்றிய அரசு. தற்போது அந்த நிகழ்வு குறித்து ‘டைம்ஸ் நவ்’ தொலைக்காட்சியில் நடைபெற்ற விவாதம் ஒன்றில், ராஜீவ் மல்ஹோத்ரா எனும் இந்துத்துவ எழுத்தாளர் **‘நியூஸ்கிளிக்’**கை தொடர்ந்து, அடுத்து **‘பாரி’** இணைய இதழ் மீது ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இந்தியக் கிராமங்கள், அங்கிருக்கும் சவால்கள், பிரச்சினைகள் போன்றவை குறித்துத் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் எழுதி பிரபலமடைந்தவர் பத்திரிகையாளர் பி.சாய்நாத். விவசாயிகள் தற்கொலைகள் தொடர்பான அவரது கட்டுரைகள் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தன. தனது பணி ஓய்வுக்குப் பிறகு, ‘பீப்பிள்ஸ் ஆர்க்கைவ் ஆஃப் ரூரல் இந்தியா’ (பாரி) எனும் இணைய இதழை நடத்தி வருகிறார். அதில் கிராமங்களில் உள்ள சாதனையாளர்கள், கலைஞர்கள், அழிந்து வரும் கலைகள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எனப் பல விஷயங்களைப் பற்றி ஆழமான கட்டுரைகளும், ஆவணப்படங்களும் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

‘கலை, பண்பாடு என்ற பெயரில் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, அவர்களை அரசுக்கு எதிராக நிலைநிறுத்த **‘பாரி’** போன்ற ஊடகங்கள் முயற்சிக்கின்றன’ என்று குற்றம் சாட்டியிருக்கிறார் ராஜீவ் மல்ஹோத்ரா. இதன் மூலம் காவி அரசின் அடுத்த இலக்கு ‘பாரி’யா என்று அறிவுச் சமூகம் கொந்தளித்துக் கிடக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞருக்கு காலை உணவு!

**1976**-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி, மொரப்பூர் சட்டமன்றத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்ள தலைவர் கலைஞர் அவர்கள் தருமபுரி மாவட்டத்துக்கு வருகை தந்தார். அப்போது வேட்பாளராக இருந்த ஆர்.பி.எம்.முருகன் அவர்களின் இல்லத்தில் உண வருந்திய தலைவர் கலைஞருக்கு, என் கையால் உணவு பரிமாறும் வாய்ப்பு கிடைத்தது. காலை உணவு என்பதால், இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றைப் பரிமாறினோம். உணவு நன்றாக இருப்பதாகக் கூறினார். அவருக்கு உணவு பரிமாறிய அந்தத் தருணத்தை இப்போது நினைத்தாலும் மனம் ஆனந்தமடைகிறது.



சேகர்

**-கோ.சேகர்,**
**தி.மு.கழக மாவட்டப் பிரதிநிதி,**
**பாப்பிரெட்டிப்பட்டி,**
**தருமபுரி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ‘நம்நாடு’ தலையங்கம்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பத்து நாட்களுக்கு முன், ‘நம்நாடு’ இதழ் வெற்றி தெரிகிறது என தலையங்கம் எழுதியது. ‘நல்ல தீர்ப்பளியுங்கள்’ எனும் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், “தமிழ் மக்களாகிய உங்களின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்குரிய அரிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. சிந்தித்து செயலாற்ற மறந்து விடுவீர்களானால், உங்களுக்கு நேர உள்ள கேடுகளைத் தடுத்துக் கொள்ள முடியாமல் வேண்டியவர்களாவீர்கள்” என எடுத்துச் சொன்னது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 264




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131